# நாடகமும் அரங்கியலும்

பகுதி I இற்கான 1000 வினாக்களும் விடைகளும்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது

## தரம் 9, 10, 11

பா. நிரோஷன்

# நாடகமும் அரங்கியலும்

## பகுதி ஒன்றிற்கான 1000 வினாக்களும் விடைகளும்

*(புதிய பாடத்திட்டத்திற்கமைவானது)*

## தரம் 9, 10, 11


# பா. நிரோஷன்



வெளியீடு:

**பீனிக்ஸ் பதிப்பகம்**

136/1 - E, (1ஆம் மாடி), டாம் வீதி,

கொழும்பு - 12.

**நூல் விபரம்**

நூல் : **நாடகமும் அரங்கியலும்**
தரம் 9, 10, 11

ஆசிரியர் : பாக்கியநாதன் நிரோஷன்

©பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : யூன் 2018

வெளியீடு : பீனிக்ஸ் பதிப்பகம்
136/1 - E (1ஆம் மாடி) டாம் வீதி,
கொழும்பு - 12.

கணினி வடிவமைப்பு : திருமதி ப. காத்யாயினி

ISBN : 978-955-7226-55-2

# வாழ்த்துரை

எமது பாடசாலையின் நாடகமும் அரங்கியலும் எனும் கலைப் பாடத்தை மகிழ்நிலைக் கற்றல் எனும் அடிப்படையில் மாணவர் விருப்புடன் கற்க உகந்த வழிமுறைகளில் செயலாற்றிக் கொண்டிருக்கும் எமது பேரன்பிற்குரிய திரு. பாக்கியநாதன் நிரோஷன் அவர்களின் முதலாவது நூல் வெளியீடான நாடகமும் அரங்கியலும் (தரம் 9, 10, 11 வகுப்புகளுக்கான) சுருக்க வினாவிடை எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

எமது பாடசாலைக்கு முதல் நியமனம் பெற்று வந்த ஓர் இளமையும் துடிப்பும் மிகுந்த இளைஞன் திரு.பா. நிரோஷன் அவரது திறமைகள் சாலச் சிறந்தவை. இயல்பாகவே எல்லோருடனும் இனிமையாகவும் சகஜமாகவும் பழகும் தன்மை மற்றும் தனக்கென ஒதுக்கப்பட்ட வேலையை செவ்வனே நிறைவு செய்யும் பாங்கு அவரை ஒரு சிறந்த தொரு ஆசிரியராக என்னுள்ளே அடையாளப்படுத்தியது எனலாம். அண்மையில் அனைவரினது பேசு பொருளாக இருந்த கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் திறமை வெளிப்பாட்டு நிகழ்வில் இவருடைய எழுத்துரு நெறியாள்கையில் ''வீர நங்கையர் புரம்'' எனும் கூத்துருவ நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் இவரது நெறியாள்கையை எண்ணி நான் பெருமையடைகின்றேன். மேலும், ''இனித்துணிவோம்'', ''சர்வம் சக்தி மயம்'' போன்ற கூத்துக்களையும் ''பஞ்ச வர்ண நரியார்'' எனும் சிறுவர் நாடகத்தையும் மேடையேற்றி பலரது பாராட்டையும் பெற்றவர். அத்துடன் மனதை உருக்குவதாய் அமைந்த ''சூலகம்'', ''யார் அறிவர்'' போன்ற குறும்பட ஆக்கமும் எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையேற்றபின் வெளிவந்த படைப்புக்கள் எனக் கூறிக்கொள்வதில் எல்லையில்லா ஆனந்தம் அடைகிறேன்.

மேலும், எட்டுக் குறுந்திரைப் படத் தொகுப்பு முயற்சிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன என்பதை அறியும்போது எதிர்காலத்தில் சிறந்த ஆளுமைமிக்க ஆசானாக திகழ்வாரென்பது எமது அசையாத நம்பிக்கையாகும். எதிர்காலத்தில் உயர்பட்டங்களைப் பெறுவதுடன், சமுதாயத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான, விழிப்புணர்வு நாடகங்களை மேடையேற்ற வேண்டும் எனவும், அறிவை விருத்தி செய்யும் நூல்கள் பலவற்றை வெளியிட்டு நல்ல குருவாக மிளிர வேண்டுமெனவும் வாழ்த்தி எம்பெருமான் வரசித்தி விநாயகரின் பாதக்கமலத்தை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

''எனைதிட்பம் எய்திய கண்ணும்
வினைதிட்பம் வேண்டாரை வேண்டாது உலகு''

திருமதி. கோதை நகுலராஜா
அதிபர்
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு - 04.

# அணிந்துரை

நாடகக் கல்வியையும் நாடகப் பண்பாட்டையும் வலுவள்ளதாக மாற்றுவதற்கு நாடகமும் அரங்கியலும் தொடர்பான நூல்கள் வெளிவருவது இன்றியமையாதது. நாடகமும் அரங்கியலும் பாடநெறி இன்று இடைநிலை வகுப்புகளில் அதிகளவு மாணவர் களின் தெரிவுப் பாடமாகவும் கொள்ளப்பட்டு வருகின்றது.

பாடசாலை கலைத்திட்டத்தில் பிரதான பாடத்துறைகளின் விருத் திக்காக பாடநூல்கள் வெளிவருவது போல் அழகியல் பாடங் களுக்கான பாடநூல்கள் வெளிவராத நிலையில் தரம் 9, 10, 11இல் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களின் கற்றல் தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாக பகுதி ஒன்றிற்கான 1000 வினாவிடைகளைக் கொண்ட இந்நூலின் வெளிவருகை நாடக நூல்களிடையே ஏற்பட்ட நீண்டதொரு வெற்றிடத்தை நிரப்பும் முயற்சியாகும்.

நாடகமும் அரங்கியல் சார் மாணவர்களுக்கு மட்டுமல்லாது கற்பிக்கும் ஆசிரியருக்கான துணைச் சாதனமாகவும் இந்நூலை கொள்ளமுடியும். இந்நூலானது தரம் 9-11 வரையான நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்திற்கமைவாக ஒவ்வொரு அலகு களையும் அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தொகுக்கப் பட்டிருப்பது சிறப்பம்சமாக அமைகிறது.

அத்துடன் பரீட்சைக்கு மாணவர்களை இலகுவாக தயார்படுத்தும் நோக்கில் கடந்தகால வினாப்பத்திரங்களும் பாடத்துறைசார் படங்களும் இணைக்கப்பட்டிருப்பது நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் பல்வேறு தேவைகளை இவ்வொரே நூலின் மூலம் நிறைவு செய்வதாக அமைந்துள்ளது.

இந்நூலினை படைப்பாக்கம் செய்திருக்கும் திரு. பாக்கியநாதன் நிரோஷன் அவர்கள் 2013ஆம் ஆண்டில் நாடகமும் அரங்கியலும் விசேட பாடத்துறைக்காகத் தெரிவு செய்யப்பட்டு மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிக்கு அனுமதி பெற்றவர். 2013-2015 வரையான உள்ளகப் பயிற்சிக் காலத்தில் நாடகத்துறை சார்ந்த பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். கல்லூரி காலத்தில் பல நாடகங்களில் பிரதான பாத் திரமேற்று நடித்ததுடன் சிலவற்றின் நெறியாள்கையிலும் இசை அமைப்பிலும் முன்னின்று செயற்பட்டவர்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயத்திற்கு 2015-2016 வரை கட்டுறு பயிற்சிக்காக இவர் நியமிக்கப்பட் டதோடு இவரது மேற்பார்வை விரிவுரையாளராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் இவரது நாடகமும் அரங்கியலும் சார் கற்பித்தல் முறைகள், செய்முறைகள், செயற்திட்டங்கள் என்பன நாட கத்துறையில் இவர் சாதிக்க இருப்பதற்கான சாத்தியங்களை வெளிப்படுத்தி நின்றன.

இவர் 2016 முதல் தனது நிரந்தர ஆசிரியர் நியமனத்தை கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் பெற்று கடமையாற்றி வருகிறார். இந்த குறுகிய காலத்திற்குள் இவரது நாடக செயற்பாடு களின் வீச்சும் வேகமும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதற்குச் சான்றாக அண்மையில் கொழும்பு இராமகிருஷ்ணா அரங்கில் பாடசாலை நிதிக்காக இவர் நிகழ்த்திய வீர நங்கை புர கூத்துருவ நாடகமும் மற்றும் இனித் துணிவோம் சிந்து நடை கூத்தும் சர்வம் வக்தி மயம் எனும் வடமோடி கூத்தும் குழந்தை ம. சண்முகலிங்கத் தின் பஞ்ச வர்ண நரியார் மற்றும் இவரது தொலைந்த வீடு போன்ற சிறுவர் நாடகங்களும் குறும்படங்களான ''சூலகம்'', ''யார் அறிவர்'', ''பென்சிலும் கொப்பியும்'' போன்றனவும் சான்றாகும்.

கல்லூரியில் கற்கும் காலத்தில் இவரின் அடக்கமும் பணிவும் ஆர்வமும் படைப்பாற்றலும் மிக்கதொரு பயிலுனர் ஒப்படைத்த பணிகளைசிறப்பாக செய்து முடித்துக் காட்டியவர். இன்று நாங்கள் விதைத்த விதைகள் வளர்ந்து விருட்சமாகி நிற்பதை கண்முன்னே பார்க்கும்போது பெருமையும் பேருவகையும் கொள்கின்றோம்.

''தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மானிலத்து
மண்ணுயிர்கெலலாம் இனிது''

நிரோஷன் நாடகத்துறையில் மென்மேலும் சாதனைகள் படைக்க வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி பி. இளங்கோ
விரிவுரையாளர்
நாடகமும் அரங்கியலும் துறை
மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரி

# முன்னுரை

நாடகமும் அரங்கியலும் முக்கியமானதொரு பாடமாக சமகாலத்தில் கோட்பாடு ரீதியாகவும் செயல் மைய ரீதியாகவும் கற்பிக்கப்படுகிறது. தற்காலத்தில் நாடகமும் அரங்கியலுக்குமான பாடநூல்கள் பாடத்திட்ட வரையறைக்கூடாக வெளிவருவது அரிது. பரீட்சையில் பகுதி ஒன்றிற்கான கேள்விகள் பரவலாக வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு புதிய பாடத்திட்டத் திற்கமைவாக அலகு ரீதியாக வினாக்கள் தொகுக்கப்பட்டு நாடகமும் அரங்கியலும் பாடம்சார் புலமை வாய்ந்தவர்களின் ஆலோசனையுடன் 1000 வினாக்களும் விடைகளுமாக இப்புத்தகம் வெளிவருகிறது. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு இப்புத்தகம் உறுதுணையாக அமையுமென நம்புகிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளர் திருமதி. P. இளங்கோ அம்மணி அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா அம்மணி அவர்களுக்கும் மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரியின் பீடாதிபதி திரு. சி. இராஜேந்திரன் அவர்களுக்கும் என்னை வழிப்படுத்திய ஆசான் திருமதி பிறேமலதா டிகுமார் அவர்களுக்கும் இந்நூல் வெளிவருவதற்கு அனைத்து வகையிலும் ஒத்தாசை புரிந்த செல்வி ரூபிகா செல்வராஜ் அவர்களுக்கும் இந்நூலை மனமுவந்து வெளியிடும் வெளியீட்டகத்தாருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

பா. நிரோஷன்

நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்

கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு - 04.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கலைகள் | 01 |
| 2. | நாடகம் | 04 |
| 3. | நாடகத்தோற்றம் | 15 |
| 4. | அரங்கின் அடிப்படை மூலகங்கள் | 16 |
| 5. | அரங்க விளையாட்டு | 18 |
| 6. | புதிதளித்தல் | 20 |
| 7. | ஊமம் | 21 |
| 8. | நாடக வகைகள் | 22 |
| 9. | சிறுவர் நாடகம் | 25 |
| 10. | நாடக எழுத்துரு | 28 |
| 11. | அரங்க நடிப்பு | 30 |
| 12. | சடங்கு அரங்குகள் | 33 |
| 13. | தமிழ் நாடக வரலாறு | 39 |
| 14. | ஈழத்தமிழ் பிரதேச அரங்கு | 45 |
| 15. | இசை நாடகம் | 58 |
| 16. | சிங்கள நாடக அரங்கு | 64 |
| 17. | ஆரோடு நோகேன் | 73 |
| 18. | நெறியாள்கை | 76 |
| 19. | நாடகத் தயாரிப்பு | 79 |

20. அரங்க காட்சி விதானிப்பு 80
21. அரங்க இசை விதானிப்பு 82
22. அரங்கிற்கான அசைவு இயக்கம் 86
23. வேட உடை விதானிப்பு 87
24. நாடக ஒப்பனை 88
25. அரங்க ஒளி விதானிப்பு 89
26. நாட்டிய சாஸ்திரம் 91
27. ஈழத்து நாடக ஆளுமைகள் 95
28. நாடக நிறுவனங்கள் 109
29. நால்வகை அபிநயங்கள் 114
30. புதியதொரு வீடு 117
31. நூல்களும் ஆசிரியர்களும் 118

# கலைகள்

**1. கலை என்றால் என்ன?**

தன் உள்ளத்து உணர்வினைக் கைத்தேர்ந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்தல் கலை எனப்படும்.

**2. கலை பற்றி வோட்ஸ்ரூவோட்டின் கருத்து யாது?**

''மனிதன் ஒருவன் மனிதருக்கு மனிதனது சாதாரண மொழியில் பேசுவதே கலையாகும்.''

**3. ''மனிதனின் மானிடத்திற்கான நிவேதனமே கலை'' எனக் கூறியவர் யார்?**

கிறீஸ்றெட்

**4. ''இன்பம் தரவும் இன்பம் பெறவுமான சாக்கு இருக்கின்றதோ அதுவே கலை'' எனக் கூறியவர் யார்?**

அன்னதாசங்கர்ரஸ்கின்

**5. ஹொனிக்மன் கலைகள் பற்றி என்ன கூறுகின்றார்?**

மனிதத்திறனின் வெளிப்பாடுகளே கலை

**6. கலைகளைப் பொதுவாக எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

1. நுண்கலை 2. பயன்கலை

**7. புலன்களை அடிப்படையாகக் கொண்டு கலைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

1. கட்புலக்கலை 2. செவிப்புலக்கலை
3. கட்புல செவிப்புலக்கலை

**8. நுண்கலை என்றால் என்ன?**

நுணுக்கமான வேலைப்பாட்டுடன் அழகியலைப் பிரதானப்படுத்தி படைக்கப்படுகின்ற கலை நுண்கலை எனப்படும்.

9. நுண்கலைக்குள்ளே அடங்கும் கலை வடிவங்கள் எவை?

நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், கூத்து.

10. நுண்கலையினை மேலும் எவ்வாறு வகைப்படுத்தலாம்?

1. ஆற்றுகைக்கலை 2. ஆக்குகலை

11. ஆற்றுகைக்கலை என்றால் என்ன?

ஆற்றுவோர் பார்ப்போர் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும் கலைகள் ஆற்றுகைக்கலை எனப்படும்.

12. ஆற்றுகைக் கலைகளைத் தருக.

இசை, நடனம், நாடகம், கூத்து

13. நுண்கலை வடிவத்துக்குள்ளே அடங்காத கலைகள் எனினும் ஆற்றுகைக்கலை வடிவத்துக்குள்ளே அடங்கும் கலைகளைத் தருக.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், சிலம்பம்

14. ஆக்குகலை என்றால் என்ன?

நுகர்வோர் நுகரும்போது படைப்பாளியின் தொடர்பற்ற கலை

15. ஆக்குகலைகளுக்கு உதாரணம் தருக.

கட்டிடம், சிற்பம், ஓவியம்

16. பயன்கலை என்றால் என்ன?

பயனை முதன்மையாகக் கொண்டு படைக்கப்படும் கலை

17. பயன்கலைகளுக்கு உதாரணம் தருக.

நெசவு, கைத்தொழில், மட்பாண்டம், உருக்குவேலை

18. கண்ணினால் நுகரப்படும் கலை எவ்வாறு அழைக்கப்படும்?

கட்புலக்கலை

19. கட்புலக்கலைகளுக்கு உதாரணம் தருக.

சிற்பம், ஓவியம்

20. செவிப்புலக்கலை என்றால் என்ன?

செவியினால் நுகரப்படும் கலை

21. கண், செவி இரண்டினாலும் நுகரப்படும் கலை எவ்வாறு அழைக்கப்படும்?

கட்புல செவிப்புலக்கலை

22. செவிப்புலக் கலைகளுக்குள் அடங்குபவற்றிற்கு உதாரணம் தருக.

இசை, வாத்தியஇசை

23. கட்புல செவிப்புலக் கலைகளுக்கு உதாரணம் தருக.

நாடகம், கூத்து, கவிதை, இசைக்கச்சேரி, நடனம்

24. கலைகளை மேலும் எவ்வாறு வகைப்படுத்தலாம்?

காலக்கலை, வெளிக்கலை, காலவெளிக்கலை

25. அவைக்காற்றுக் கலைகளைக் குறிப்பிடுக.

நாடகம், நடனம், இசை, கூத்து

26. காலக்கலைக்குள்ளே அடங்கும் கலை எது?

இசை

27. காலவெளிக் கலைக்குள்ளே அடங்கும் கலைகளைத் தருக.

நாடகம், கூத்து, நடனம்

28. வெளிக்கலைகளைத் தருக.

கட்டிடம், சிற்பம், ஓவியம்

29. அரங்கில் செவிப்புல ரீதியான தாக்கத்தை பார்ப்போருக்கு ஏற்படுத்தும் துணைக்கலை எது?

இசை

30. நுண்கலைகளை வேறு எவ்வாறு எல்லாம் அழைப்பர்?

கவின்கலை, அழகுக்கலை, முருகியற்கலை

# நாடக அரங்கு பற்றிய எண்ணக்கரு

## நாடகம்

1. *நாடகம் என்றால் என்ன?*

குறித்த ஓர் இடத்தில் குறித்த நேரத்தில் பார்வையாளர் முன்னிலையில் நடிகர்கள் சம்பவம்/நிகழ்வு/சூழமைவு ஒன்றினை அரங்க மூலகங்களின் துணையுடன் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவது நாடகம் ஆகும்.

2. *தமிழ்ப் பாரம்பரியத்தில் நாடகம் எவ்வாறு அழைக்கப் பட்டது?*

கூத்து

3. *நாடகம் ஒன்று நிகழ்த்த மிக அவசியமானது?*

நடிகர்

4. *ஒரு நாடகத்திற்கான காட்சி அலங்காரம் என்றால் என்ன?*

நாடக அளிக்கையின் பிரதான மோடியை நிலைநிறுத்தல்.

5. *தமிழ்நாட்டில் பிரதானமாக இடம்பெறும் நாடகவடிவம் எது?*

தெருக்கூத்து

6. *சிங்களத்தில் நாடகத்தைக் குறிப்பதற்கான சொல் எது?*

நாட்டிய

7. *உலகளாவிய ரீதியில் நாடக அரங்கு பற்றி வெளிவரும் தமிழ்மொழி மூலமான இதழ்?*

கட்டியம்

8. *சர்வதேச நாடகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?*

மார்ச் மாதம் 27ம் திகதி

9. அரிஸ்டோட்டில் நாடகத்தின் மூலம் வெளிப்படும் உணர்ச்சி வெளியேற்றத்தை எவ்வாறு அழைத்தார்?

கதாசிஸ்

10. ஆரம்ப காலத்தில் நாடகக்கொள்கை விளக்கத்தில் சிறந்து விளங்கியவர்கள் யாவர்?

அரிஸ்டோட்டில், பரதமுனிவர்

11. உலகில் முதன்முதலில் அவலச்சுவை நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டு நடிக்கப்பட்ட நாடு எது?

கிரேக்கம்

12. Drama (நாடகம்) என்ற சொல்லின் கிரேக்க மூலச்சொல் யாது?

Dramenon

13. இலங்கையில் தமிழ்மொழியில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடம் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் முதன்முறையாக எந்த ஆண்டு பரிட்சிக்கப்பட்டது?

1979

14. ஐரோப்பாவின் மத்தியகால நாடகம் எந்த மதத்தின் அடியாகத் தோன்றியது?

கத்தோலிக்க மதம்

15. வட இலங்கை சங்கீத சபை நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை 6ந் தரம் சித்தியடைவதற்கு வழங்கப்படும் பட்டத்தினைக் குறிப்பிடுக.

நாடக கலாவித்தகர்

16. மத்தியகால நாடக வகைகளைக் குறிப்பிடுக.

1. சமயம் சார்ந்தது. 2. சமயம் சாராதது

17. நாடகசாலை என்பது யாது?

நாடகம் ஆடப்படும் இடத்தை நாடகசாலை என்பர்.

18. நாடகம் வாழ்க்கையைப் போலச் செய்வது எனக்கூறியவர் யார்?

அரிஸ்டோட்டில்

19. தமிழ் நாடகங்களை கட்சி அரசியல் பிரச்சாரத்திற்கு முதல்முதலில் பயன்படுத்திய தென்னிந்திய அரசியற் கட்சி எது?

திராவிட முன்னேற்றக்கழகம்

20. கிரேக்க றஜடி நாடகங்களுக்கான கரு எக்காவியங்களில் இருந்து எடுக்கப்பட்டது?

இலியட், ஒடிசி

21. "வாழ்வின் துண்டம் நாடகம்" எனக் குறிப்பிட்ட அறிஞர் யார்?

பேனாட் ஷோ

22. தெருவெளி நாடகத்தின் பண்புகளைத் தருக.

- விழிப்புணர்வு
- பார்ப்போருடன் நெருக்கமான உறவு
- குறைந்த நடிகர்கள் போதும்

23. நாடக மோதுகை அவலமான முடிவினைக் கொண்டதாயின் அது எவ்வாறு அழைக்கப்படும்?

துன்பியல் நாடகம்

24. நாடக விமர்சனம் ஒன்றின் பிரதான பணி

குறைநிறைகளைக் கூறி வழிப்படுத்துதல்

25. நாடகக்கலையின் கட்டமைப்பு எதைப்பொறுத்து அமையும்?

நாடகக் கதையைப் பொறுத்து அமையும்.

26. நாடகத்தின் பிரதான அம்சம் எது?

மோதுகை

27. *நாடக ஊழியரின் சிந்தனைக்கு ஊடகமாக அமைவது?*

நடிக்ன்

28. *நாடகம் ஒரு கூட்டுக்கலை எனப்படுகிறது. இதற்கான காரணம் யாது?*

நாடகம், இசை, நடனம், இலக்கியங்கள் போன்ற பல்வேறு கலையம்சங்களுடன் இணைந்து வருவதால் நாடகம் கூட்டுக் கலை எனப்படுகிறது.

29. *நாடகத்தினை எழுதுபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?*

நாடகாசிரியர்

30. *திருஸ்ய காவியம் என வடமொழியில் அழைக்கப்படுவது?*

நாடகம்

31. *நாகத்தினை விமர்சிப்பவர்?*

விமர்சகர்

32. *பாரம்பரிய நாடகங்களில் கட்டியக்காரன் புரிந்த பணியினை நவீன நாடகங்களில் புரிபவர்?*

எடுத்துரைஞர்

33. *சமஸ்கிருத மரபில் நாடகத்தினை நடத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?*

சூத்திரதாரி

34. *நாடகம் ஆற்றப்படும் கணம் அது நம்முன்னே பிரசன்னமாகி இருப்பதால் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?*

கணப்பிரசன்னமான கலை

35. *நாடகத்தினுள்ளே ஒரு மையக்கருவும் அதனைச் சூழ்ந்து பல விடயங்களை உள்ளடக்கிய சம்பவத் தொடரும் காணப்படுவதால் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?*

விடய நோக்கான கலை

36. **நாடகம் எப்பொழுது முழுமை அடைகின்றது?**

ஆற்றுகை நிலைக்கு உட்படுகின்றபொழுது

37. **நாடகத்தின் ஒரு கட்டம்வரை நடிகர்கள் வளர்த்துவர இறுதிப்பகுதி பார்வையாளரால் நெறிப்படுத்தப்படும் அரங்கு**

வாத விவாத அரங்கு

38. **சமஸ்கிருத மரபு கூறும் நாடக வகைகளின் எண்ணிக்கை**

10

39. **கவிதை இயல் எனும் நூலை எழுதியவர்**

அரிஸ்டோட்டல்

## அரங்கு

1. **நாடகம் நிகழ்த்தப்படும் இடம் அல்லது கலைநிகழ்ச்சி நடைபெறும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?**

அரங்கு

2. **புராதன கிரேக்க ஆற்றுகைகள் இடம்பெற்ற அரங்கினைத் தருக.**

மலையடிவாரம்

3. **நாடகம் ஆடப்படும் கரலியவைப் பொறுத்தவரை பார்ப்போர்**

மூன்று பக்கங்களில் இருந்து பார்ப்பர்.

4. **பெரும்பாலும் படச்சட்ட அரங்கிலேயே அன்றிலிருந்து இன்றுவரை ஆற்றுகை செய்யப்படும் கூத்து வடிவம்**

யாழ்ப்பாணக் காத்தவராயன் கூத்து

5. **கூத்து இடம்பெறும் அரங்கு எவ்வாறு அழைக்கப்படும்?**

வட்டக்களரி / கூத்துக்களரி

6. **வட்டக்களரியின் பிரதான அம்சம் யாது?**

பார்ப்போர் அரங்கினைச் சுற்றிவர இருப்பர்.

7. சூரன்போர் ஆலய வடக்கு வீதியில் இடம்பெறுவதுபோல் காமன்கூத்து இடம்பெறும் அரங்கு

பொட்டல்வெளி

8. தேவாலய முன்றலில் இடம்பெறும் நாடகவடிவம்

பாஸ்கா

9. தற்காலத்தில் அதிகமாக நாடகங்கள் இடம்பெறும் அரங்கு எது?

படச்சட்ட அரங்கு

10. படச்சட்ட அரங்கில் (Picture Frame Theatre) பார்ப்போர் எப்போதும் நாடக நிகழ்வுகளை

ஒரு பக்கம் இருந்து பார்ப்பர்

11. ''கோலம்'', ''தானயம்பல'' வில் இடம்பெறுவது போல் சொக்கரி நிகழ்த்தப்படும் அரங்கு யாது?

களத்து மேடு

12. புராதன கிரேக்க அரங்கில் பார்ப்போர் பார்க்கும் இடம் எவ்வாறிருந்தது?

வட்ட வடிவானதாக இருந்தது

13. Theatre (அரங்கு) என்ற சொல்லின் கிரேக்க மூலச்சொல் யாது?

Theatrone (தியட்றன்)

14. தற்காலத்தில் பயன்படுத்தப்படும் மேடைகள் எவை?

சுழல் மேடை, படச்சட்ட மேடை, தெருவெளி அரங்கு, திறந்தவெளி அரங்கு

15. பார்ஷி நாடக வருகையின் முன்னர் தமிழ் நாட்டின் அரங்கு எவ்வாறு இருந்தது?

திறந்தவெளி அரங்காக இருந்தது

16. படச்சட்ட மேடையில் அதிமுக்கியமான பகுதிகள் எவை?

DC, DR, DL, CC

17. படச்சட்ட மேடையில் முக்கியத்துவம் குறைந்த பகுதிகள்

UR, UL

18. CR, CL, UC என்பன படச்சட்ட மேடையில் எவ்வாறான பகுதிகள்

முக்கியமான பகுதிகள்

19. படச்சட்டமேடை கொண்டுள்ள பல்வேறு உட்கட்டு மானங்களைத் தருக.

- தீயணைப்புத்திரை
- காட்சித்திரை
- தொங்குதிரைகள்
- விண்திரை
- பக்கவாட்டுத்திரைகள்
- முன்மேடை
- இசைக்கலைஞர்கள் தளம்

20. அரைவட்ட அரங்குக்கு உதாரணம் தருக.

உரோம அரங்கு, கரலிய

21. அரங்கவெளியின் வடிவமைப்புக் கருதி அரங்குகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

திறந்தவெளி நிகழ்விடங்கள் (outdoor), உள்ளக நிகழ்விடங்கள் (Indoor)

22. அரங்கவெளியின் ஆற்றுவோர் - பார்ப்போர் அமர்வு நிலையில் அரங்குகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

- வட்டவடிவஅரங்கு
- அரைவட்டஅரங்கு
- படச்சட்ட அரங்கு

23. **படச்சட்டமேடை வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**
புறசீனிய அரங்கு, வில்வளைவு மேடை

24. **படச்சட்டமேடை எப்போது, எங்கு தோற்றம் பெற்றது?**
17ம் நூற்றாண்டு, இத்தாலியில் தோற்றம் பெற்றது.

25. **ஈழத்தில் அதிகமாக தெருவெளி அரங்கினைப் பயன்படுத்து பவர்களைத் தருக.**
க. சிதம்பரநாதன், சி. ஜெயசங்கர்

26. **அரங்கினை பௌதீக ரீதியாக எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
வட்ட அரங்கு, சதுர அரங்கு, முக்கோண அரங்கு, சமதள அரங்கு, படச்சட்ட மேடை


27. **கருத்தியல் ரீதியாக அரங்கினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
பாரம்பரிய அரங்கு, நவீன அரங்கு, சிறுவர் அரங்கு, பெண்ணியல் அரங்கு, தலித் அரங்கு, ஒடுக்கப் பட்டோருக்கான அரங்கு, சமூக அரங்கு

28. **அரங்கவெளி எப்போது அர்த்தமுள்ள அழகிய வெளியாகின்றது?**
ஆற்றுவோர், பார்ப்போர் சந்திக்கும் போது

29. **பார்வையாளருடன் மிக நெருங்கிய உறவைக் கொண்ட அரங்கவெளி**
வட்டக்களரி



30. **மிக அண்மைக்காலத்தில் வந்த அரங்கு**
சுழலும் மேடை




31. **படத்தில் உள்ள அரங்கு**
யப்பானிய நோ அரங்கு

32. *அருகே தரப்பட்டுள்ள அரங்கில் இடம்பெறும் நிகழ்த்துகை*




கூத்து

33. *காலத்தால் முந்திய அரங்காகக் கருதப்படும் படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு*




கிரேக்க அரங்கு

34. *படம் காட்டும் சிங்கள அரங்கிலே நிகழ்த்தப்படும் ஆற்றுகை*



சொக்கறி


35. *படத்தில் உள்ள அரங்கவெளி குறிப்பது*



மகிடி கூத்தரங்கு


36. அருகே காட்டப்பட்டுள்ள அரங்கு

குளோப் தியேட்டர்




37. படத்தில் உள்ள சிங்க அரங்கு


கரளிய



38. படத்தில் உள்ள அரங்கவெளி


உரோமானிய அரங்கு





39. படத்தில் உள்ள அரங்கவெளியிலே நிகழ்த்தப்படும் ஆற்றுகை


கோலம



40. படத்தில் உள்ள அரங்கு

திறந்தவெளி


41. அருகே படத்தில் உள்ள அரங்கு
முக்கோண (திரிஸ்ர) அரங்கு




42. படத்தில் உள்ள அரங்கவெளி குறிப்பது
சதுர (சதுஸ்ர) அரங்கு



43. அருகே தரப்பட்டுள்ள அரங்கு
செவ்வக (விகிருஸ்ட) அரங்கு



# நாடகத்தின் தோற்றம்

1. ***நாடகம் எதனடியாகத் தோற்றம் பெற்றது?***

   சடங்கினடியாக

2. ***நாடகம் சடங்கிலிருந்து தோற்றம் பெற்றது எனக் கூறியவர்கள்***

   தொம்சன், கா. சிவத்தம்பி, அலாடிஸ், நிக்கோல், ஜோன்கரிசன்

3. ***நாடகத் தோற்றம் பற்றி பரதமுனிவரின் கருத்து யாது?***

   உலக நடைமுறைகளைப் போலச் செய்தலே நாடகம் ஆகும்.

4. ***நாடகம் சடங்கினடியாகத் தோற்றம் பெற்றது எனக் கூறிய ஈழத்தவர்***

   கா. சிவத்தம்பி

5. ***அரிஸ்டோட்டில் நாடகத் தோற்றம் பற்றி கூறும் கருத்து***

   போலச் செய்தலில் இருந்து நாடகம் தோன்றியது.

6. ***பாவைக்கூத்தில் இருந்து நாடகம் தோன்றியது எனக் கூறியவர்***

   விடர்ஸ்

7. ***விளையாட்டிலிருந்து நாடகம் தோன்றியது எனக்கூறியவர்***

   ஆர்.எல். ஆகுஜா

8. ***நாடகத் தோற்றம் பற்றி ஹில்லேப்பிராண்டின் கருத்து யாது?***

   நடனத்திலிருந்து நாடகம் தோன்றியது.

9. ***உலக நாடகத்தின் தோற்றம் ஆரம்பமாகிய நாடு***

   எகிப்து

10. ***இரஷ்ய நாடகங்கள் எப்போது தோற்றம் பெற்றது?***

    *18 ஆம் நூற்றாண்டு*

# அரங்கின் அடிப்படை மூலகங்கள்

1. *நாடகமொன்றின் பிரதான மூலகங்கள் எவை?*

   நடிகன், அரங்கு, பார்வையாளர்

2. *நாடகத்தின் துணை மூலகங்களாகக் கருதப்படுபவற்றைத் தருக.*

   ஒளி, உடை, காட்சி, ஒப்பனை, இசை

3. *நாடகத்தின் பிரதான மூலகம் எது?*

   நடிகன்

4. *உலகின் முதலாவது நடிகன் என்ற சிறப்புக்குரியவர் யார்?*

   தெஸ்பிஸ்

5. *தெஸ்பிஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?*

   கிரேக்கம்

6. *பார்வையினை ஆள்பவர்கள் யார்?*

   பார்வையாளர்கள்

7. *''தெஸ்பியன்ஸ்'' என அழைக்கப்படுபவர்கள் யாவர்?*

   கிரேக்க கலைஞர்கள்

8. *சிறந்த நடிகர் ஒருவருக்கு வேண்டப்படுவன*

   ஆர்வம், உள்ளார்ந்த ஆற்றல், மனஉறுதி, பயிற்சி

9. *அரங்கப் பொருட்கள் எனப்படுவது யாது?*

   நடிகர்கள் மேடையில் பயன்படுத்தும் பொருட்களாகும்.

10. *நடிகர் வேட முகத்தை அணிவதற்கான நோக்கங்கள்*

    - வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுத்தல்
    - தன்னை உருமாற்றுதல்
    - பாத்திரத்தைச் சுட்டுதல்

11. ஒரு நடிகனின் சிறப்பை எவ்வாறு மதிப்பிடலாம்?

பாத்திரத்தைச் சித்தரிக்கும் முறைமை, பார்ப்போரிடையே பாத்திரம் பற்றிய நம்பகத் தன்மையை ஏற்படுத்தும் நடிப்பு முறைமை மூலம்

12. நடிகனுக்கு மிக அவசியமானது

உடல்

13. பார்வையாளர்களை சிரிக்கவைக்கும் சுவை எது?

நகைச்சுவை

14. பார்வையாளரும் நடிகரும் சேர்ந்து செய்யும் விவாத களமாக நாடகத்தைக் கருதியவர்

மேயர் கோல்ட்

15. நடிகன் தன்னைத் தானே நெறிப்படுத்தும் அரங்கு

ஓராள் அரங்கு

16. நாடக ஆற்றுகை யார் இன்றி முழுமை அடைவதில்லை?

பார்வையாளர்

17. நாடகம் யாருடைய கலையாகப் பார்க்கப்படுகின்றது?

நடிகரின்

18. அரங்கில் நிகழும் முதல் காண்பியம்

நடிகன்

19. நாடகமொன்றில் நல்ல நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்நாடகம் எத்தனை சதவீதம் வெற்றியடைந்ததாகக் கருதப்படும்?

50%

20. சமஸ்கிருத மரபில் பார்ப்போன் எவ்வாறு அழைக்கப்படுகின்றான்?

சஹிர்தயன்

# அரங்க விளையாட்டு

1. அரங்கிற்கு நடிகனைத் தயார்படுத்தும் விளையாட்டு எவ்வாறு அழைக்கப்படும்?

   அரங்க விளையாட்டு

2. அரங்க விளையாட்டின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் சில தருக.

   அவதானம், கற்பனை வளம், அறிவுப் பெருக்கம், வேகம்

3. விளையாட்டுக்களைப் பொதுவாக எவ்வாறு வகைப் படுத்தலாம்?

   கிராமிய விளையாட்டுக்கள், வழி விளையாட்டுக்கள், அரங்க விளையாட்டுக்கள்

4. அரங்க விளையாட்டுக்களைத் தருக.

   - ஆடும் வீடும்
   - கந்தையாண்ணை சொல்கிறார்
   - அடிஅடி நுளம்படி
   - ஊதப்பா ஊது
   - பொன்முட்டை விளையாட்டு
   - சோடியைக் கண்டுபிடித்தல்
   - சொத்து சேகரித்தல்
   - இலக்கங்களுக்கு ஒன்று சேர்த்தல்
   - குலைகுலையா முந்திரிக்காய்
   - எங்கிருந்து வாறீங்களோ
   - எவ்விடம் எவ்விடம் புளியடி புளியடி
   - எட்டு வட்டம் போடுதல்
   - சீட்டு ஒட்டம்
   - நிலையம் மாறும் விளையாட்டு
   - பழக்கலவை

- தலைவரைக் கண்டுபிடி
- கோழி கோட்டான்
- 7 up
- காக்காக் குஞ்சு
- நண்டு, இறால், மீன்
- கண்ணாடி விளையாட்டு
- தண்ணீர் பலூன்
- வட்டத்திற்குள் கெந்தியடித்தல்
- எறியும் பந்தைத் தவிர்த்தல்
- இப்போ என்ன நேரம்
- கண்ணாம் பூச்சி ஆட்டம்
- சுக்கு பக்கு ரயிலு
- காகம் உயிர் பெறுதல்
- பேணி அடுக்கி விளையாடுதல்
- கரடி வேட்டை
- குரல் ஆட்டம்
- பொதி மாற்றுதல்
- வாகன ஆட்டம்
- பசுவும் புலியும்
- சிரட்டையை கவிழ்ப்போம் நிமித்துவோம்

**5. ஒரு நடிகனுக்கு குரற் பயிற்சியினை மேற்கொள்ள உதவும் அரங்க விளையாட்டுக்கள்**

நாராய் நாராய், கோழி கோட்டான், குலைகுலையா முந்திரிக்கா, பசுவும் புலியும்

**6. உளப்பயிற்சினை விருத்தி செய்ய உதவும் அரங்க விளையாட்டுக்கள் சில தருக.**

ஆடும் வீடும், கரடியும் கிராம மக்களும், கந்தையாண்ணை சொல்கிறார், பெரியபானை சின்னப்பானை

7. உடற்பயிற்சிக்கு உறுதுணையாகக் கொள்ளப்படும் அரங்க விளையாட்டுக்கள்

ஆடும் வீடும், அடி அடி நுளம்படி, கந்தையாண்ணை சொல்கிறார், வால் அறுத்தல்

## புதிதளித்தல்

1. *புதிதளித்தல் என்றால் என்ன?*

*முன்னாயத்தமின்றி கற்பனையுடன் வரும் நடிப்பு*

2. *புதிதளித்தல் மூலம் விருத்தியடையும் திறன்கள் எவை?*

*கற்பனைத்திறன், தொடர்பாடற்திறன், படைப்பாற்றற் திறன், கூட்டாகச் செயற்படும் திறன், சரியான தீர்மானமெடுக்கும் திறன்.*

3. *புதிதளித்தலை வேறு எவ்வாறு அழைப்பர்?*

புத்தாக்கம் (improvisation)

4. *புதிதளித்தல் பயன்படுத்தக்கூடிய அரங்கு?*

*தெருவெளி அரங்கு*

5. *புதிதளித்தலின்போது பயன்படுத்தப்படும் சித்தரிப்புக்கள்*

*உடல்வழிச் சித்தரிப்பு, உணர்ச்சி வழிச் சித்தரிப்பு, காண்பியவழி, குரல் வழி*

# ஊமம்

1. வாய்மொழியைப் பயன்படுத்திக் கொள்ளாது நடிகர் ஒருவர் நடிபாகத்தைச் சித்திரிப்பது

ஊமம்

2. வாய்மொழிச் சித்திரிப்பு இல்லாத ஆற்றுகைகள் எவை?

ஊமம், கூட்டுமம், நடனம், பலே

3. உரையாடல் இல்லாது நடித்து கருத்தை வெளிப்படுத்தும் முறையை எவ்வாறு அழைப்பர்?

ஊமம்

4. ஊமச் சித்திரிப்பில் முக்கியம் பெறும் அபிநயங்கள்

ஆங்கிக அபிநயம், ஆஹார்ய அபிநயம், சாத்வீக அபிநயம்

5. ஊம நாடகம் தோற்றம் பெற்ற காலம்

உரோமர் காலம்

6. ஈழத்தில் ஊம நாடகங்களை முன்னெடுத்துச் செல்பவர்

ரதிதரன்

7. ஊமச் சித்திரிப்பினைஅடிப்படையாகக் கொண்டு திருமறைக் கலாமன்றத்தால் தயாரிக்கப்பெற்ற நாடகங்கள்

களங்கம், சமயத் தூது, புறம், அசோகா, தர்ஷனா

8. வாச்சிகா அபிநயம் பயன்படுத்தப்படாத ஆற்றுகை வடிவம்

ஊமம்

9. ஊம நடிகர்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய பிரதான பயிற்சி

உடற்பயிற்சி

10. சொக்கரி நிகழ்த்துகையில் இடம்பெறும் ஊமச் செயற்பாடுகள்

மரத்தைத் தறித்தல், தோணி செய்தல், கடலைக் கடத்தல், வீடு கட்டுதல், வீட்டை மெழுகுதல், பாய் இழைத்தல்

# நாடக வகைகள்

1. அண்மைக் காலத்தில் பரவலடைந்து காணப்படும் நாடக வகைகளைத் தருக.

   முழுநீள நாடகம், ஓரங்க நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், பாடசாலை நாடகம், சிறுவர் நாடகம்

2. கிரேக்கத்தில் காணப்படும் நாடக வகைகள்

   இன்பியல், துன்பியல், சற்றையர்

3. நீண்ட நேரத்தில் முடியும் தன்மை கொண்ட நாடகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

   முழுநீள நாடகம்

4. கேட்போரது மனதை அரங்காகக் கொண்ட நாடக வடிவம்

   வானொலி நாடகம்

5. வானொலி நாடகத்தின் மூலம் புகழ் பெற்றவர்களைத் தருக.

   சானா (சண்முகநாதன்), பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வரணியூரன், ஜோர்ச், சந்திரசேகரன்

6. தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான இயல்பு

   கமராவை மையமாகக் கொண்டிருத்தல்

7. பாடசாலை நாடகங்களில் முன்னோடியாகத் திகழ்பவர்

   குழந்தை ம. சண்முகலிங்கம்

8. பாடசாலை நாடகத்தில் நடிக்கக்கூடிய மாணவர்களின் வயதெல்லை

   11 - 18

9. 1980 களில் பாரம்பரிய முறையிலான நாடகங்களை பாடசாலையில் மேடையேற்றியவர்கள்

A.T.பொன்னுத்துரை, S.கதிரேசப்பிள்ளை, T. சண்முக சுந்தரம், T.சோமசுந்தரம், க. சிதம்பரநாதன், பிரான்சிஸ் ஜெனம்

10. **குழந்தை ம. சண்முகலிங்கத்தால் எழுதப்பட்ட பாடசாலை நாடகங்களைத் தருக.**

மாதொரு பாகம், நாளை மறுதினம், நகரத்தில் இடர்படோம், சத்திய சோதனை, சிலையின் சீற்றம், ஆரோடு நோகேன்

11. **நவீன முறையில் கல்வியை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை நாடகங்கள் மேடையேற்றப்பட்ட பாடசாலைகள்**

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி

12. **யதார்த்த நாடகங்கள் சில தருக.**

ஆரொடு நோகேன், எந்தையும் தாயும், உறவுகள், கண்ணன் கூத்து

13. **மோடிமைப்படுத்தப்பட்ட நாடகம் என்பது**

யதார்த்த விரோத நாடகம் ஆகும்.

14. **யதார்த்த நாடகப் பாணியும், யதார்த்த விரோத நாடகப் பாணியும் கலந்த நாடகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**

கலப்புப்பாணி நாடகம்

15. **கலப்புப்பாணி நாடகங்களுக்கு உதாரணம் தருக.**

புழுவாய் மரமாகி, அன்னையிட்ட தீ, இராவணேசன்

16. **ஒரங்க நாடகத்தின் அடிப்படை அம்சம்**

நேரச்சுருக்கம்

17. **யதார்த்த மோடி நாடகத்திற் காணப்படும் பிரதான இயல்பு**

ஒப்பனை இயல்பானதாகக் காணப்படும்

18. **தொலைக்காட்சி நாடகத்தின் இயல்புகள்**

- கட்புல செவிப்புலக் கலைவடிவம்
- ஒவ்வொரு பாத்திரத்தையும் ஒவ்வொரு நடிகர் ஏற்பர்
- கமராவே சித்திரிப்பு ஊடகம்
- சின்னத்திரையே அரங்காகும்

19. **வானொலி நாடகத்தின் இயல்புகள்**

- செவிப்புலக் கலை வடிவம்
- நடிகரின் குரலே சித்திரிப்பு ஊடகம்
- ஒருவரே பல பாத்திரங்களை ஏற்று நடிப்பர்
- பார்ப்போரின் மனமே அரங்காகும்

20. **வானொலி நாடகத்தின் பிரதான பண்பு**

குரல் வெளிப்பாடு

21. **உள்ளதை உள்ளவாறு நடிக்கும் நாடக முறைமை**

யதார்த்தவாதம்

22. **வானொலி நாடகத்தின் பிரதான அபிநயம்**

வாச்சிக அபிநயம்

23. **வானொலி நாடகம் எங்கு காட்சிப்படிமம் ஆகும்?**

மனத்திரையில்

# சிறுவர் நாடகம்

1. **சிறுவர் நாடகம் என்றால் என்ன?**

   சிறுவர்களின் திறன் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதற்கு பங்கெடுக்கும் நாடகம்

2. **சிறுவர் நாடகம் எத்தனை வகைப்படும்?**

   மூன்று

3. **சிறுவர் நாடகத்தின் மூன்று வகைகளையும் தருக.**

   சிறுவர்கள் சிறுவர்களுக்காக நடிப்பது பெரியவர்கள் சிறுவர்களுக்காக நடிப்பது சிறுவரும் பெரியோரும் சேர்ந்து சிறுவர்களுக்காக நடிப்பது

4. **சிறுவர் நாடகத்தில் நடிக்கக்கூடிய சிறுவர்களின் வயதெல்லை**

   7 - 12

5. **ஈழத்தில் சிறுவர் நாடகங்களில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்**

   குழந்தை ம. சண்முகலிங்கம், பேராசிரியர் சி. மௌனகுரு, சி. ஜெயசங்கர், சோமலதா சுபசிங்க

6. **தமிழ்நாட்டில் புகழ்பெற்ற சிறுவர் நாடக ஆசிரியர்களைத் தருக.**

   பேராசிரியர் சோ. இராமானுஜர், வேலு சரவணன்

7. **குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதலாவது சிறுவர் நாடகம்**

   கூடி விளையாடு பாப்பா

8. **குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய சிறுவர் நாடகங்கள்**

   ஆச்சி சுட்ட வடை, முயலார் முயல்கிறார், அன்னையும் பிதாவும், அயலவன் யார், தாய் சொல்லைத் தட்டாதே, செல்லும் செல்லாத செட்டியார், கூடி விளையாட்டு பாப்பா, கண்டறியாத கதை

9. **பேராசிரியர் சி. மௌனகுரு எழுதிய சிறுவர் நாடகங்கள்**

தப்பி வந்த தாடியாடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

10. **"பிள்ளை அழுத கண்ணீர்" எனும் சிறுவர் நாடகத்தை எழுதியர்?**

சி. ஜெயசங்கர்

11. **சிங்களத்தில் சிறுவர் நாடகங்களை எழுதிப் புகழ் பெற்றவர்கள்**

சந்திரசேன தசநாயக்கா, சோமலதா சுபசிங்க

12. **அங்காதுங்கா, தங்கராணி, தேவலோகயானை, பல்லி போன்ற சிறுவர் நாடகங்களை எழுதியவர்**

வேலு சரவணன்

13. **பேராசிரியர் சோ. இராமனுஜர் எழுதிய சிறுவர் நாடகங்கள்**

குட்டியானை, கொம்பு முளைக்குது

14. **சிறுவருக்கான அரங்கு எனில் அதில் அத்தியாவசியமானது**

சிறுவருக்கு விளங்கும் வகையில் ஆட்ட அசைவுகளுடனான நடிப்பு முறைமை

15. **"கூடி விளையாடு பாப்பா' எனும் சிறுவர் நாடகத்தை தயாரித்தவர்**

அ. தாசீசியஸ்

16. **மாவை நித்தியானந்தன் எழுதிய சிறுவர் நாடகங்கள்**

சட்டியும் குட்டியும், அரசனின் புத்தாடை

17. **ஈழத்து சிறுவர் நாடக வரலாற்றில் முதல் திருப்பத்தை ஏற்படுத்திய தமிழ் சிறுவர் நாடகம்**

கூடி விளையாடு பாப்பா

18. *கூடி விளையாடு பாப்பா நாடகம் முதன்முதலில் யாரால் நடிக்கப்பட்டது?*

பெரியவர்களால்

19. *"சின்னச் சின்னக் குருவிகள் ...." என்ற பாடல் இடம்பெறும் சிறுவர் நாடகம்*

வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

20. *"மச்சம் தின்னும் சிங்கம் நான்...." என்ற பாடல் இடம்பெறும் நாடகத்தின் ஆசிரியர்*

ம. சண்முகலிங்கம்

# நாடக எழுத்துரு

1. **நாடக எழுத்துரு என்றால் என்ன?**

   நாடக ஆற்றுகையின் கதை, செயல்நிலை, படிமம், துணைக் கலைகளின் பிரயோக முறைமை என்பவற்றை எழுத்தாக்க முறையில் கொண்டு வருதல் நாடக எழுத்துரு ஆகும்.

2. **எழுத்துருவின் வகைகளைத் தருக.**

   செந்நெறி நாடக எழுத்துரு

   யதார்த்த நாடக எழுத்துரு

   மிகைப்பாட்டு நாடக எழுத்துரு

   மனோரதிய நாடக எழுத்துரு

   யதார்த்த விரோத நாடக எழுத்துரு

3. **எழுத்துரு ஒன்றை உருவாக்கும் செயன்முறையை ஒழுங்கு ரீதியில் தருக.**

   கதை, சூழமைவுகள், சம்பவங்களின் ஒருமைப்பாடு, தர்க்க ரீதியான தொடர்பு

4. **எழுத்துரு ஒன்றிற்கு வியாக்கியானம் அளிப்பவர்**

   நெறியாளர்

5. **நாடக எழுத்துரு ஒன்றில் மிக முக்கியமான விடயம்**

   மோதுகை/முரண்

6. **எழுத்துருவை நினைவூட்டுபவர்**

   எடுத்துச்சொல்லி

7. **நாடகத்தின் அரூவ மூலகம்**

   எழுத்துரு

8. **எழுத்துரு ஒன்றில் கருப்பொருள் எவற்றினால் கட்டியெழுப்பப்படும்?**

   சம்பவங்களால்

9. **எழுத்துரு ஒன்றில் இடம்பெறும் ஒளி நினைவுக் குறிப்பு (Lighting Que) என்றால் என்ன?**

எழுத்துருவின் யாதேனும் ஒரு பகுதிக்கு எவ்வாறு ஒளியமைப்பது என்பது தொடர்பானது.

10. **நாடக எழுத்துருவில் பிரதானமானது**

கரு

11. **எழுத்துருவின் பல்வகைத் தன்மைக்கான காரணங்கள்**

நாடகாசிரியரின் திறன், மோடி, கதைத் தெரிவுமுறை, ஆற்றுகை செய்யப்படும் சூழல், இலக்குப் பார்ப்போர், ஆற்றுகையின் தேவை

12. **சொல்லாடல் என்றால் என்ன?**

நாடகப் பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்

# அரங்க நடிப்பு

1. ***நடிப்பு என்றால் என்ன?***

   ஒன்றை உருமேற்கொள்ளும் செயற்பாடு / ஆள்மயமாதல்

2. ***''நடிகன் அரங்கில் பாத்திரமாக வாழ்கின்ற நிலை நடிப்பு'' எனக் கூறியவர்***

   ஸ்ரெனிஸ் லாவஸ்கி

3. ***பிறக்ட் நடிப்பு பற்றி கூறும் கருத்து***

   நடிப்பு என்பது ''நடிகன் குறிப்பிட்ட பாத்திரத்தைச் செய்து காட்டல்''

4. ***அரங்கப் பயிற்சிகள் என்றால் என்ன?***

   ஒரு நடிகன் சிறந்த முறையில் நடிப்பதற்கு உடல், குரல், உளம் ஆகியவற்றைத் தயார்ப்படுத்த மேற்கொள்ளும் பயிற்சிகள்

5. ***ஒரு நடிகன் மேற்கொள்ளவேண்டிய மூன்று அரங்கப் பயிற்சிகளும் எவை?***

   உடற்பயிற்சி, உளப்பயிற்சி, குரற்பயிற்சி

6. ***நடிப்பினை வேறு எவ்வாறு அழைப்பர்?***

   ஆள்மேற்கொள்ளல்

7. ***நடிகனுக்கு ஏன் உடற்பயிற்சி அவசியமாகின்றது?***

   நடிப்பினை வெளிப்படுத்துவதற்கு

8. ***நடிகன் பாத்திரத்தினுள் பிரவேசிப்பதற்கு அவசியமான அரங்கப் பயிற்சி***

   உடற்தளர்வுப் பயிற்சி

9. ***குரல் பயிற்சி பெறுவதன் மூலம் குரலில் எவற்றை மாற்றியமைக்கலாம்?***

   குரலின் வீச்சு, தொனி, ஒலியின் பண்பு

**10. மூச்சுப் பயிற்சியானது நடிகனுக்கு ஏன் அவசியமாகின்றது?**

*குரல் பயிற்சியினை இலகுவாக மேற்கொள்ள*

**11. குரல் பிறப்பிக்கப்படும் இடங்கள்**

*வயிறு, நெஞ்சு, தொண்டை, மூக்கு, உச்சந்தலை*

**12. மன்னர் கதாபாத்திரம் ஒன்று கோபமாகக் கதைக்கும்போது குரல் எவ்விடத்திலிருந்து பெறப்படுகின்றது?**

*அடி வயிறு*

**13. மனிதன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் புலன்கள்**

*கண், காது, மூக்கு, உடல், உள்ளம்*

**14. சுவாசப் பயிற்சியில் ஈடுபடும்போது மேற்கொள்ளும் அடிப்படைச் சுவாசமுறைகள்**

*உட்சுவாசம், வெளிச்சுவாசம்*

**15. நடிப்புப் பயிற்சியின்போது முக்கியமாகக் கவனிக்கப்படும் மூன்றும் எவை?**

*உடல், மனம், குரல்*

**16. பீதியூட்டும் ஒலிகள் உடலில் எப்பகுதியிலிருந்து எழுப்பப்படுகின்றது?**

*உச்சந்தலை*

**17. உள்ளதை உள்ளவாறே எடுத்துக்காட்டும் அரங்க மோடி**

*யதார்த்தவாத மோடி*

**18. நடிப்புக் கோட்பாடுகளைத் தருக.**

*யதார்த்த நடிப்பு, யதார்த்த விரோத நடிப்பு, கற்பித வாத நடிப்பு*

**19. ஆசிய நடிப்பு முறையின் இரு வகைகளையும் தருக.**

*1. சீன, யப்பானிய நடிப்பு முறை*

*2. இந்திய நடிப்பு முறை*

20. **போலச் செய்தல் என்றால் என்ன?**

பார்த்து அவதானித்த ஒன்றினை எமது உடலால், குரலால், உணர்வால், காண்பியங்களால் ஒத்த வகையில் மீளச் செய்தல்

21. **ஸ்ரனிஸ்லெவஸ்கியின் பார்வையில் ஓர் நடிகனின் உருவாக்கம் என்ற நூலை எழுதியவர்**

கணேசன் மேகநாதன்

22. **உடல்மொழி என்ற நூலின் ஆசிரியர்**

ஆலன் & பார்பராபீஸ்

23. **உடல்மொழியும் அசைவும் என்ற நூலின் ஆசிரியர்**

Dr. N. ஸ்ரீதரன்

24. **மூச்சுப்பயிற்சி, பேச்சுப் பயிற்சி என்பன நடிகரின்**

குரலை நெகிழ்வு நிலைக்குக் கொண்டுவர உதவுகின்றன.

25. **நாடகப் பயிற்சி பட்டறைகள் செய்யப்படுவதன் நோக்கங்களில் பிரதானமானது**

நல்ல நடிகராகவும் நல்ல மனிதராகவும் வாழ்வதற்கு

# சடங்கரங்குகள்

1. *சடங்கு என்றால் என்ன?*

பரம்பரை பரம்பரையாக எந்த கேள்விகளும் இன்றி பலனை எதிர்பார்த்து செய்யப்படுபவை.

2. *சடங்கிலிருந்து நாடகம் எவ்வாறு உருவாகின்றது?*

சடங்குகளில் உள்ள நம்பிக்கை, பயம் அல்லது பக்தி குறையும்போது சடங்கு நாடகமாக உருவாகின்றது.

3. *சடங்குகளில் நடிகராகக் கருதப்படுபவர்கள்*

மதகுரு, குறித்த தெய்வத்தைப் போன்று பாவனை செய்பவர்கள்

4. *சடங்கு நாடகமாக மாறும்போது பக்தர்கள் எவ்வாறு மாற்றமடைகின்றனர்?*

பார்வையாளர்களாக மாற்றமடைகின்றனர்.

5. *நாடகம் நிகழ்த்தப்படும் இடம் அரங்கு போல சடங்குகள் நிகழ்த்தப்படும் இடம்*

கோயில் முன்றல்

6. *பேராசிரியர் சி. மௌனகுரு சடங்கிலிருந்து நாடகம் தோன்றும் முறையை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?*

- நாடகம் சார்ந்த சமயக்கரணம்
- சமயக் கரணங்கள் சார்ந்த நாடகங்கள்
- சமயக் கரணத்திலிருந்து விடுபட்ட நாடகங்கள்

7. *கிரேக்க நாடகம் எதிலிருந்து தோன்றியது?*

டயோனிஷஸ்த் தெய்வத்திற்கு செய்யப்பட்ட சடங்கில் பாடப்படும் டித்திராம்ஸ் எனும் பாடலில் இருந்து தோன்றியது.

8. ''கதவு அடித்துப் பாடுதல்'' எனும் நிகழ்வுடன் தொடர்புபட்ட சடங்கு

வேட்டைத் திருவிழா

9. குளிர்த்திச் சடங்கு பெரும்பாலும் எங்கு நிகழ்த்தப்பெறும்?

கண்ணகியம்மன் கோயில்களில்

10. அர்ச்சுனன் தபசு எனும் சடங்குவழி நாடகத்தின் கதை இடம்பெறும் இலக்கியம்

மகாபாரதம்

11. சடங்குசார் நிகழ்த்துகைகளுக்கு உதாரணம் தருக.

குளிர்த்தி, வேட்டைத் திருவிழா, பாஸ்கா, திருப்பலிச் சடங்கு, பெரிய வெள்ளிச் சடங்கு, வீரபத்திரர் ஆட்டம், யமசங்காரம், சூரன்போர்

12. ஈஸ்டர் தினத்திற்காக நடத்தப்பெறும் சடங்கு நாடகத்தில் இடம்பெறும் கதை

இயேசுவின் மரிப்பும் உயிர்ப்பும்

13. உடக்குப்பாஸ் சடங்காட்ட மரபின் பிரதான வெளிப்பாட்டுச் சாதனம்

பாவைகள்

14. 'உடக்குப்பாஸ்' எனும் நாடக நிலைச்சடங்கு நிகழ்த்தப் பெறும் பிரதேசம்

மன்னார் பேசாலை

15. வேட்டைத் திருவிழாவில் நிகழ்த்தப்படும் கதை

புராதன மக்கள் மிருகங்களிடமிருந்து தமது தோட்டத்தைப் பாதுகாக்க இறைவனின் உதவியை நாடும் கதை

16. ஒட்டுச்சுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலய திருவிழாவில் கதவடித்துப் பாடுதல் எந்த இரு தெய்வங்களுக்கிடையே இடம்பெறும்?

சிவனுக்கும் பார்வதிக்கும் இடையே

17. கண்ணகியம்மன் கோயில்கள் பரவலாக அமைந்துள்ள பிரதேசங்கள்

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, அம்பாறை, திருகோணமலை

18. குளிர்த்தி சடங்கு ஆலயங்களில் எத்தனை நாட்கள் இடம்பெறும்?

3 அல்லது 5 அல்லது 7 நாட்கள்

19. பாண்டவர் வனவாசம் நிகழ்த்தப்பெறும் பிரதேசங்கள்

பாண்டிருப்பு, கல்முனை, மட்டக்களப்பு, சிலாபம், பழுகாமம், புத்தளம்

20. பாண்டவர் வனவாசத்தில் அரங்குகளாகப் பயன்படுத்தப் படுபவை

கோயில்வெளி வீதி, முழுக்கிராமம்

21. முருகன் ஆலயங்களில் வேட்டைத் திருவிழாவில் "கதவு அடித்துப் பாடுதல்" இடம்பெறும் தெய்வங்கள்

முருகன், தெய்வானை

22. 18 நாட்கள் நிகழும் பாண்டவர் வனவாசம் சடங்கில் எப்போது "வனவாசம்" நிகழ்த்தப்பெறும்

16ஆம் நாள்

23. குளிர்த்திச் சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகள்

சொல்லாடல், போலச் செய்தல், அரங்கப் பொருட் பயன்பாடு, பார்ப்போரின் ஈடுபாடு

24. குளிர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படுகின்றமைக்கான நோக்கங்கள்

மழைவளம், பிள்ளைப்பேறு, பாவ விமோசனத்தை வேண்டியும் பிரதானமாக வெப்பத்தினால் வரும் நோய்களைத் தீர்த்தல்.

25. **சூரன்போர் எனும் சடங்குடன் தொடர்புடைய தெய்வம்**

முருகன்

26. **கந்தபுராணக் கதையை அடிப்படையாகக் கொண்ட சடங்கு**

சூரன்போர்

27. **சூரன் போரில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்கள்**

முருகன், சூரன்

28. **சூரன் போர் சடங்கில் இடம்பெறும் துணைப்பாத்திரங்கள்**

வீரவாகு தேவர், தாரகாசூரன், சிங்கமுகாசூரன்

29. **சூரன்போர் சடங்கிலே பயன்படுத்தப்படும் அரங்கப் பொருட்கள்**

வேல், வாள், சூலம், மாங்கொப்பு

30. **சூரன்போர் சடங்கில் பயன்படுத்தப்படும் ஒளி ஊட்டங்கள், இசைக்கருவிகள்**

ஒளி ஊட்டங்கள் - தீவர்த்தி ஒளி, தீப ஒளி

இசைக்கருவிகள் - தவில், நாதஸ்வரம், சங்கு, சேமக்கலம்

31. **பாஸ்கா எனும் சடங்கு எம்மதம் சார்ந்த சடங்கு**

கிறிஸ்தவ மதம்

32. **பாஸ்காவில் சித்திரிக்கப்படும் காட்சிகள்**

யேசுவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்ப்பு

33. **பாஸ்காவிற்கும் உடக்குபாஸ்க்கும் இடையிலான பிரதான வேறுபாடு**

பாஸ்கா மனிதர்களாலும், உடக்குபாஸ் மனிதர், பாவைகளால் ஆற்றுகை செய்யப்படும்.

34. **இலங்கையில் அரங்க அம்சங்களை அதிகம் பயன்படுத்திய பாஸ்காவை நிகழ்த்தும் நாடக நிறுவனம்**

திருமறைக்கலாமன்றம்

35. **பாஸ்கா நிகழ்த்தப்படும் பிரதேசங்கள்**
மன்னார், சிலாபம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

36. **இயேசு உயிர்த்தெழுதலைக் குறிக்கும் நாள்**
ஈஸ்டர்

37. **பாஸ்கா சடங்கு குறிக்கும் பிரதான தத்துவக் கருத்து**
அநீதியை ஒழித்து மக்களுக்கு நல்லதை வெளிப்படுத்தல்

38. **பாஸ்கா புலப்படுத்தும் தத்துவக் கருத்துக்கள்**
தெய்வநீதி, தர்மம் வெல்லும், அதர்மம் அழியும்

39. **பாஸ்கா சடங்கின் கதை**
இயேசுவைச் சிலுவை சுமத்தி கல்வாரி மலைக்கு கொண்டு சென்று சிலுவையில் அறையும் நிகழ்வு

40. **பாஸ்கா சடங்கில் காணப்படும் பாத்திரங்கள்**
இயேசு, மேரி, மேரிமக்தலேனா, வெறோணிகா

41. **மேற்கத்தேயப் பாணியிலான உடை பயன்படுத்தப்படும் சடங்கு**
பாஸ்கா

42. **பாவைக் கூத்துடன் தொடர்புடைய சடங்கு**
சூரன்போர்

43. **சடங்கின் மறுபெயர்**
ரிச்சுவல், கரணம், கிரியை

44. **குளிர்த்தி சடங்கு நடைபெறும் மாதம்**
வைகாசி

45. **நாடகத்தின் தோற்றுவாயாக அமைவது**
சடங்குகள்

46. குளிர்த்தி சடங்கில் இடம்பெறும் இசைக்கருவிகள்

தவில், நாதஸ்வரம், உடுக்கு, சங்கு, சேமக்கலம்

47. வேட்டைத் திருவிழாவில் இடம்பெறும் இசைக்கருவிகள்

தவில், நாதஸ்வரம், பறை, முரசு

48. ஒயிலாட்டம் ஆடப்படுவதற்கான நோக்கம்

வேளாண்மைத் தொழில் செழிக்கவேண்டும்

49. ஒயிலாகவும் கம்பீரமாகவும் அழகாகவும் ஆடுகின்ற ஆட்டம்

ஒயிலாட்டம்

50. ஒயிலாட்டத்தில் உள்ள அடவுகளின் எண்ணிக்கை

12

# தமிழ் நாடக வரலாறு

**1. தமிழ் நாடக வரலாற்றின் வளர்ச்சிக் காலகட்டத்தினை ஒழுங்குமுறையில் தருக.**

- *சங்ககாலம் (கி.பி. 1-3)*
- *சங்கமருவிய காலம் (கி.பி. (3-6)*
- *பல்லவர்காலம் (கி.பி. 6-9)*
- *சோழர்காலம் (கி.பி. 9-13)*
- *நாயக்கர்காலம் (கி.பி. 14-18)*
- *தெருக்கூத்து*
- *19-20ஆம் நூற்றாண்டு தமிழ் நாடகம்*
- *பார்ஷி நாடகம்*
- *நவீன நாடகம்*

**2. சங்ககாலத்தில் நாடக வரலாற்றினை அறிய உதவும் நூல்**

*பதிணென் மேற்கணக்கு நூல்கள்*

**3. சங்க காலத்தில் காணப்பட்ட விழாக்கள்**

*காமன் விழா, வேனில் விழா, இந்திர விழா*

**4. கங்க காலத்தில் காணப்பட்ட சடங்குகள்**

*களவேள்வி, துணங்கைக் கூத்து, தைநீராடல், வேலன் வெறியாடல், குரவைக்கூத்து*

**5. மருத நிலத்தில் ஆடல் பாடல்களில் ஈடுபட்டவர்கள்**

*பரத்தையர்கள்*

**6. சங்க காலத்தில் காணப்பட்ட கூத்தர் குழுக்கள்**

*புலவர், கோடியர், வயிரியர், கண்ணளர், கூத்தர், பாணர், பொருணர், அகவுணர், முதலியார்*

7. *சமண, பௌத்த மதத்தினரின் செல்வாக்குக்கு உட்பட்ட காலம்*

சங்கமருவிய காலம்

8. *சங்கமருவிய காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் நூல்*

சிலப்பதிகாரம்

9. *மாதவி ஆடிய ஆடல்களின் எண்ணிக்கை*

*11*

10. *''தலைக்கோலி'' பட்டத்தை பெற்றவர்*

மாதவி

11. *சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட விடயங்கள்*

வேத்தியல், பொதுவியல் கூத்து, மாதவியின் ஆடல்கள், குழலாசிரியன், மேடையமைப்பு, திரை, அலங்காரம், அவைக்காற்று முறைகள், இசையாசிரியன், யாழ் ஆசிரியன், தண்ணுமையாசிரியன்

12. *மாதவியின் 11 வகையான ஆடல்கள்*

கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல், குடைக்கூத்து, குடம், பேடியாட்டம், மரக்காலாட்டம், பாவைக்கூத்து, கடையம்

13. *''எழுனி'' எனப்படுவது*

திரை

14. *பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட நாடகம்*

மகேந்திரவர்மனின் ''மத்த விலாச பிரகசனம்''

15. *பக்திநெறிக் காலமாக திகழ்ந்த காலம்*

பல்லவர்காலம்

**16. கோயிலை மையமாகக் கொண்டு நாடகங்கள் தோன்றிய காலம்**

சோழர்காலம்

**17. சோழர் காலத்தில் நாடகத்தை நிகழ்த்தியோர்**

கோயில்பினாப் பெண்டுகள்

**18. சோழர் காலத்தில் காணப்பட்ட நாடகமேடை**

நாணாவித நாடகசாலை

**19. நாயக்கர் காலத்தில் காணப்பட்ட நாடக வடிவங்கள்**

பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனை நாடகம்

**20. சோழர் காலத்தில் நிகழ்த்தப்பட்ட நாடகங்கள், கூத்துக்கள்**

நாடகங்கள் - இராஜஇராஜேஸ்வர நாடகம், பூம்புலியூர் நாடகம், திருமூலர் நாடகம்

கூத்துகள் - சாக்கைக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து

**21. பள்ளு நாடக வடிவங்கள் சில தருக.**

ஞானப்பள்ளு, வையாபுரிபள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, கனகராயன் பள்ளு, முக்கூடற் பள்ளு

**22. கதாகாலேட்சபம் என அழைக்கப்படுவது**

கீர்த்தனை

**23. குறவஞ்சி நாடகங்கள் சில தருக.**

குற்றாலக் குறவஞ்சி, அழகுமலைக் குறவஞ்சி

**24. கீர்த்தனையின் பிரதான ஊடகம்**

இசை

**25. தெருக்கூத்து என்பது**

வீதிகளிலே ஆடப்படும் ஒரு வகையான கூத்து

**26. தெருக்கூத்துவின் பிரதான ஊடகம்**

ஆடலும், பாடலும்

**27. சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலரால் நிறுவப்பட்ட சபை**

பாலமனோகரசபா

**28. சுகுணவிலாச சபையை தோற்றுவித்தவர்**

பம்மல்.சம்பந்த முதலியார்

**29. பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய இதிகாச நாடகங்கள், சேக்ஸ்பியரின் தழுவல் நாடகங்களைத் தருக.**

இதிகாச நாடகங்கள் - சபாபதி, காதலர் கண்கள், சங்கீத பைத்தியம்

தழுவல் நாடகங்கள் - அமலாதித்தன் (ஹம்லட்), வாணிபுர வணிகன் (வெனிஸ் நகர வர்த்தகன்) நீ விரும்பிய விதமே, மகபதி

**30. பம்மல் சம்மந்த முதலியாரது சமூக நாடகங்கள்**

சாரங்கரா, மனோகரா, வேதாள உலகம்

**31. பம்மல் சம்மந்த முதலியாரது வரலாற்று நாடகங்கள்**

சிறுத்தொண்டர், சகுந்தலை

**32. தூக்குமேடை, ஒரே முத்தம், நச்சுக்கோப்பை போன்ற நாடகங்களை எழுதியவர்**

கலைஞர் கருணாநிதி

**33. அறிஞர் அண்ணாத்துரை எழுதிய நாடகங்கள்**

வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, காதல் ஜோதி

**34. பிரளயம் எனும் நாடகத்தை எழுதியவர்**

ராமசாமி

**35. பள்ளு நாடகத்தினை வேறு எவ்வாறு அழைப்பர்?**

உழத்திப்பாட்டு

36. **சிலப்பதிகாரத்தில் கூறப்படும் இருவகையான நாடக மரபு**

வேத்தியல், பொதுவியல்

37. **சிலப்பதிகாரத்தை எழுதியவர்**

இளங்கோவடிகள்

38. **ராம நாடக கீர்த்தனையை எழுதியவர்**

அருணாசலக்கவிரயர்

39. **பூம்புலியூர் நாடகம் எக்காலத்தில் தோற்றம் பெற்றது?**

சோழர் காலத்தில்

40. **சங்ககாலத்தில் தோன்றிய பிரதான பெண் கலைஞர்**

விறலியர்

41. **தமிழ் நாடக உலகின் இரட்டையர் என அழைக்கப்படுபவர்கள்**

டி.கே.எஸ். சகோதரர்கள் (டி.கே. பகவதி, டி.கே. சண்முகம்)

42. **சங்ககாலத்தினை வேறு எப்பெயரில் அழைப்பர்?**

வீரயுக காலம்

43. **நிலப்பிரபுத்துவ காலம் என அழைக்கப்பட்ட காலம்**

வணிகயுக காலம்

44. **கோயிற் பண்பாட்டு காலம் என அழைக்கப்பட்ட காலம்**

சோழப்பெருமன்னர் காலம்

45. **குழுவ நாடகத்திற்கும் குறவஞ்சி நாடகத்திற்கும் இடையேயுள்ள உறவு**

குறவஞ்சி நாடகத்தின் இறுதி பகுதியே குழுவ நாடகம்

46. **சங்க இலக்கியங்கள் கூறும் கோடியருடன் தொடர்புடைய கருவி**

முழவு

47. ''ஆச்சியர் குரவை'' ஆட்டத் தொடக்கத்தில் ஆடும் பெண்கள் எவ்வகையில் நிற்பர்?

வட்டவடிவில் நிற்பர்

48. மத்த விலாசப் பிரகாசனத்தின் பிரதான பண்பு

நகைச்சுவைப் பண்பு மேலோங்கிக் காணப்படுதல்

49. குறவஞ்சி நாடகத்தில் இணைக்கப்பட்டுள்ள மூன்று சிற்றிலக்கியங்களும் எவை?

உலா, குறம், குளுவம்

# ஈழத்துத் தமிழ்ப் பிரதேச அரங்கு

1. **கூத்தின் ஊடகம்**

   ஆடலும்பாடலும்

2. **கூத்து என்றவுடன் எம் மனதில் வருவது**

   ஆடல்

3. **இலங்கையில் கூத்து ஆடப்பெறும் பிரதேசங்கள்**

   மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா, சிலாபம், புத்தளம், மலையகம், அம்பாறை

4. **கூத்தில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள்**

   சட்டம் கொடுத்தல், களரி குடிபுகுதல், சதங்கையணி விழா செய்தல், அரங்கேற்ற விழா, வீட்டுக்கு வீடு ஆடுதல்

5. **பொதுவாக கூத்துகளில் பயன்படுத்தப்படும் பிரதான இசைக் கருவிகள்**

   மத்தளம், உடுக்கை, பறை, கப்பு

6. **கூத்துக்களை பழக்குபவர்**

   அண்ணாவியார்

7. **பெரும்பாலும் கூத்துக்களில் கருவாகக் காணப்படும் கதைகள்**

   புராண கதைகள், இதிகாசக் கதைகள், வரலாற்றுக் கதைகள்

8. **சபையோர் என அழைக்கப்படுபவர்கள்**

   தாளக்காரர், பிற்பாட்டுக்காரர்

9. **கட்டியக்காரன் முறைமை வரும் நாடகமரபு**

   தமிழ்க்கூத்து

10. **நாட்டுக்கூத்து மரபில் வட்டம் போடுதல் என்பது**

    தூரம் நடந்து செல்வதைக் குறிக்கும்.

11. ***இந்தியாவில் தெருக்கூத்து பயிலப்படும் மாநிலம்***
*தமிழ்நாடு*

12. ***வரவுப்பாட்டு என்பது***
*பாத்திரம் தானே பாடுவது*

13. ***நாட்டை எனும் கூத்து வடிவம் பெரும்பாலும்***
*பருத்தித்துறைப் பிரதேசத்திலேயே ஆடப்படுகிறது.*

14. ***ஈழத்தில் எவ்வகையான கூத்தில் பூமுடி தலையில் வைத்து ஆடப்படுகிறது?***
*மட்டக்களப்பு தென்மோடி*

15. ***காத்தவராயன் கூத்தில் பிரதானமாகப் பயன்படுத்தும் வாத்தியம்***
*உடுக்கு*

16. ***மட்டக்களப்பு வட மோடிக் கூத்துக்கள் சில தருக.***
*இராம நாடகம், இராவணேசன்*

17. ***தென்மோடிக் கூத்துக்கள் சிலவற்றைத் தருக.***
*நொண்டி நாடகம், அனுருத்ர நாடகம், அலங்கார ரூபன்*

18. ***மட்டக்களப்பு ஆட்டமுறையில் எட்டுப்போடுதல் என்பது***
*8 போன்று சுற்றி ஆடுதல்*

19. ***கூத்தில் வீசாணம் என்பது***
*ஒருவர்பின் ஒருவராக வட்டமாக பாம்பு போல் வளைந்து ஆடிச் செல்லல்*

20. ***நாட்டுக்கூத்தில் வரும் தரு***
*சுரவரிசை போன்று கூத்துப் பாட்டுக்களை பாடும் முறைமை அமைத்துக்காட்டும் ஒரு வித தற்கோப்பு*

21. ***காமன் கூத்தில் கதாநாயகியின் பெயர் யாது?***
*ரதி*

22. **கட்டியக்காரன் என்பவர் யார்?**

நாடகத்தின் கதையையும் பாத்திரங்களையும் பார்வை யாளருக்கு அறிமுகப்படுத்துபவர்.

23. **மலையகத்தில் ஆடப்படும் கூத்துக்கள்**

காமன்கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர்

24. **கழுமரம் காட்சிப் பொருளாக வைத்து பிரதானமாக ஆடப்படும் கூத்து**

காத்தவராயன் கூத்து

25. **கிழக்கிலங்கை கூத்து மரபில் தாளக்கட்டு என்பது**

கூத்துகளுக்கு வழங்கப்படும் ஒழுங்குகள்

26. **பறைமேளக் கூத்தின் தனித்துவம்**

வேட உடையணிந்து இரண்டு அல்லது மூன்று பேர் பறையைத் தாங்கிக் கொண்டு தாளத்தைப் பறையில் அடித்து ஆடுதல்

27. **பறைமேளக் கூத்தில் பயன்படுத்தப்படும் குழலின் பெயர் யாது?**

சொர்ணாளி

28. **இலங்கையில் வசந்தன் கூத்து, மகிடிக்கூத்து ஆடப்படாத பிரதேசம்**

மன்னார்

29. **கூத்துக்களில் திரைபிடித்தல் என்பது**

ஒவ்வொரு பாத்திர வரவுக்கும் அணி அறையிலிருந்து சேலை ஒன்றைப் பிடித்தல்

30. **இலங்கையில் பறைமேளக் கூத்து பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம்**

மட்டக்களப்பு

31. **கூத்தின் வடிவத்துக்குள் சமகாலத்துக்குரிய கதைப் பொருளைப் புகுத்தி ஆக்கப்பட்ட நாடகங்கள்**

சங்காரம், கந்தன் கருணை, பொறுத்தது போதும்

32. **மட்டக்களப்புக் கூத்துக்களில் ஆண்களுக்குரியதாக காணப்படும் ஆடல்கள்**

உலா, பொடியாடி, வீசாணம், எட்டுப்போடல், நடனம், குந்துமி

33. **மலையகத்து திருச்செந்தூரன் அவர்களால் எழுதி தயாரிக்கப்பட்ட கூத்து**

பொன்னர் சங்கர்

34. **செந்நெறிக் கலைவடிவமான பரத நாட்டியத்தையும் கூத்தையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட புதிய நாடகங்கள்**

சக்தி பிறக்குது, சரிபாதி

35. **கோவலன் கூத்து பிரதானமாக ஆடப்படும் பிரதேசம்**

முல்லைத்தீவு

36. **பொன்னர் சங்கர் எனும் கூத்தின் கதை எந்த இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது?**

மஹாபாரதம்

37. **மன்னார் முருங்கனைச் சேர்ந்த குழந்தை செபமாலை அவர்களால் எழுதப்பெற்ற கூத்து**

தீரனை வென்ற தீரன்

38. **வடமோடிக் கூத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்**

மத்தளம், சல்லாரி

39. **கோவலன் கூத்தில் இடம்பெறும் பாத்திரங்கள்**

வஞ்சிப்பத்தன், பாண்டி மகாராஜன், கண்ணகி, பாண்டிமாதேவி

40. **காத்தவராயன் கூத்துடன் தொடர்புடைய தெய்வம்**

மாரியம்மன்

41. **காமன் கூத்தில் தளமாக அமையும் கதை**

சிவபெருமான் தன் நெற்றிக் கண்களால் மன்மதனை அழித்தல்

42. **வடபாங்கு என்பது**

மன்னாரில் ஆடப்படும் கூத்து வகை

43. **மலையகத்தில் பிரதானமாக ஆடப்படும் கூத்து**

காமன் கூத்து

44. **ஒரு குழு இன்னொரு குழுவை மந்திரதந்திரங்களால் மயக்கும் ஆட்டவடிவம் குறிப்பது**

மகிடி கூத்து

45. **பாத்திரங்கள் அரங்கிற்கு தாம் வருவதையும் அரங்கை விட்டுப் போவதையும் தாமே எடுத்துக் கூறிக்கொள்ளும் நடிப்பு முறைமை காணப்படும் கூத்துக்கள்**

காத்தவராயன், அர்ச்சுனன் தபசு

46. **மட்டக்களப்பு பிரதேசக் கூத்துக்களை ஆராய்ந்து பேராசிரியர் சி. மௌனகுருவால் வெளியிடப்பட்ட நூல்**

மட்டக்களப்பு மரபுவழி நாடகம்

47. **பறைமேளக் கூத்தினை ஆடுபவர்கள்**

பறையர்

48. **பறைமேளக் கூத்தினை நடாத்திச் செல்பவர்**

மூப்பன்

49. **மகிடிக் கூத்து ஆடப்பெறும் பிரதேசங்கள்**

முல்லைத்தீவு, வவுனியா, மூதூர், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

50. **மட்டக்களப்பிலே ஆடப்படும் மகிடிக் கூத்துக்களின் எண்ணிக்கை**

*3*

51. **மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்துக்கள்**

மகிடிக்கூத்து, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்து, புலிக் கூத்து, வடமோடி, தென்மோடி

52. **மகிடிக்கூத்து நிகழ்த்தப்படும் அரங்கு**

நீள சதுர அரங்கு

53. **மகிடிக் கூத்தில் வரும் பாத்திரங்கள்**

ஒண்டிப்புலி, காமாட்சி, வேடன், வேடுவிச்சி, மீனாட்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி

54. **மகிடிக் கூத்தில் இடம்பெறும் தெய்வங்கள்**

சாம்பலாண்டி, சுடலைவைரவன்

55. **மட்டக்களப்பு பகுதியில் அறுவடை முடிந்தபின் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு நிகழ்த்தப்படும் கூத்து எது?**

வசந்தன் கூத்து

56. **வசந்தன் கூத்தில் பிரதான நிகழ்வு**

பாடல்களை உரிய சந்தத்தில் பாடியபடி 6/12 பேர் கோலடித்து ஆடுவர்.

57. **வசந்தன் கூத்தில்அபிநயித்துக் காட்டப்படும் நிகழ்வுகளைத் தருக.**

வரம்பு கட்டுதல், விதைத்தல், உழுதல், அறுவடை செய்தல், உப்பட்டி கட்டுதல்

58. **வசந்தன் கூத்தில் பிரதான இசைக்கருவிகள் எவை?**

மத்தளம், தாளம்

59. **மட்டக்களப்பு கூத்துகளில் பெண்களுக்குரிய ஆட்டங்கள்**

ஒய்யாரம், தட்டடி, அடந்தை, குந்துநிலை

60. வடமோடி, தென்மோடி ஆகிய இருகூத்திலும் பிரதான வாத்தியம்

மத்தளம்

61. இந்தியாவிற்கு வடக்கே இருந்து வந்த ஆரியக்கூத்து

வடமோடி

62. இந்தியாவிற்குத் தெற்கே இருந்து வந்த தமிழ்கூத்து

தென்மோடி

63. வெற்றியினை பிரதான நோக்கமாகக் கொண்ட கூத்து

வடமோடி

64. தென்மோடி கூத்தின் கதை எதை சார்ந்தது

காதல்

65. கத்தோலிக்கப் பாங்கான கூத்து மரபுகள் புகழ்பெற்று விளங்கும் இடம்

மன்னார்

66. மன்னாரில் ஆடப்படும் கூத்துக்கள்

வாசாப்பு, வடபாங்கு, தென்பாங்கு, உடக்குப்பாஸ்

67. யாழ்ப்பாண பாங்கு எனவும் மாதோட்டப்பாங்கு எனவும் அழைக்கப்படும் கூத்துக்கள்

யாழ்ப்பாணப் பாங்கு - வடபாங்கு

மாதோட்டப் பாங்கு - தென்பாங்கு

68. வடபாங்கு, தென்பாங்கின் கதைச் சுருக்கத்தை அறிமுகம் செய்பவர்

புலசந்தோர்

69. வடபாங்கு, தென்பாங்கில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி கள்

டோலக், மிருதங்கம், ஹார்மோனியம்

70. *லோரன்ஸ் பிள்ளை எழுதிய நாடக நூல்*
மூவிராசாக்கள்

71. *மூவிராசாக்கள் எனும்வாசகப்பாவின் சிறப்பம்சம்*
முதன்முதலில் இயற்றப்பட்ட நாடக நூல்

72. *அருமை நாடகம் எனும் நூலை இயற்றியவர்*
கித்தான்பிள்ளை

73. *கந்தியோப் புலவரால் இயற்றப்பட்ட நூல்*
போதகப்பித்தான்

74. *குருகுர நாட்டுத் தேவரால் இயற்றப்பட்ட நூல்*
திருச்செல்வம்

75. *வாசாப்பு பேராசிரியர் சு. வித்தியானந்தனால் எவ்வாறு அழைக்கப்பட்டது?*
வசனம் கலந்த பா

76. *வாசாப்பு நிகழ்த்துகையில் மக்களிடையே இருந்த நம்பிக்கைகள்*
நோய்கள் அகலும், துயரங்கள் தீரும், பிணக்குகள் அகலும்

77. *ஆடும்போது தவறேதும் நிகழ்ந்தால் மீண்டும் முழுவதையும் ஆடும் முறை காணப்படும் நாடக மரபு*
வாசாப்பு

78. *வாசாப்பில் நிகழ்த்தப்பெறும் கதைக்கருக்கள்*
கத்தோலிக்கப் புனித கதைகள், பைபிள் கதைகள்

79. *கூத்துக்களைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட வாசாப்புக்கள்*
அந்தோனியார் வாசாப்பு, சந்தோமயர் வாசாப்பு, ஞானசவுந்தரி வாசாப்பு, எஸ்தாக்கியார் வாசாப்பு

80. *மன்னார் கூத்துக்களின் சிறப்பு அம்சம்*
புலசத்தோர் எனும் பாத்திரம் இடம்பெறல்

81. **வாசாப்பில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்**

ஹார்மோனியம், சுத்த மத்தளம், தாளம்

82. **வாசாப்பில் இடம்பெறும் அரங்கப் பொருட்கள்**

வாள், புலசத்தோரின் பிரம்பு, பேய்த்தலை, மந்திரக்கோல், சிலுவை, சிம்மாசனம்

83. **முல்லைத்தீவில் ஆடப்படும் கூத்துக்கள்**

மகிடிக் கூத்து, கோவலன் கூத்து, தென்மோடி, வடமோடி

84. **"முல்லைமோடி" என அழைக்கப்படும் கூத்து**

கோவலன் கூத்து

85. **கோவலன் கூத்தில் ஆட்டங்கள் எவ்வாறு காணப்படும்?**

நுணுக்கமாகவும் பாய்ந்தாடுவதாகவும்

86. **அர்ச்சுனன் தபசு எந்த அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது**

திரௌபதி அம்மன்

87. **அர்ச்சுனன் தபசில் இடம்பெறும் பாத்திரங்கள்**

அர்ச்சுனன், இந்திரன், சிவன், உமை, பன்றி, சிவகணம்

88. **பொன்னர் சங்கர் கூத்து நிகழ்த்தப்படுவதில் காணப்படும் நம்பிக்கை**

இக்கூத்தினைப் பார்த்தால் பிள்ளைப்பேறு கிடைக்கும்.

89. **பொன்னர் சங்கர் கூத்து எத்தனை நாட்கள் இடம்பெறும்?**

16 நாட்கள்

90. **பொன்னர் சங்கர் கூத்தின் பிரதான வாத்தியம்**

தப்பு

91. **யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கூத்துகளில் பிரதானமானது**

காத்தவராயன் கூத்து

92. காத்தவராயன் கூத்து "சிந்து நடைக்கூத்து" என அழைக்கப்படுவதற்கான காரணம்

இக்கூத்தில் காணப்படும் துள்ளல் நடையுடனான ஆட்டம்

93. காத்தவராயன் கூத்தில் பிரதான இசைக்கருவி

உடுக்கு

94. காத்தவராயன் மணம் முடிக்க விரும்பிய பெண்

ஆரியம்புமாலை

95. காமன்கூத்தில் இடம்பெறும் பாத்திரங்கள்

மன்மதன், ரதி, தோழன், தோழி, நந்திதேவர், நாரதர், சித்திரபுத்திரர், சிவன், உமை

96. காமன் கூத்தின் தளமாக அமையும் கதை எந்த நூலிலை அடிப்படையாகக் கொண்டது?

கந்தபுராணம்

97. காமன்கூத்து நிகழ்த்தப்பெறும் மாதம்

மாசி மாதம்

98. காமன் கூத்தினைப் பழக்குபவர்

காமன் மாஸ்ரர்

99. மலையகத்தில் கூத்தினைப் பழக்குபவர்

மாஸ்ரர்

100. மலையகப் பிரதேசத்திற்கான தனித்துவமான கூத்து வடிவம்

காமன் கூத்து

101. தலையில் கிளிப் பொம்மை வைத்து ஆடப்படும் கூத்து

பொன்னர் சங்கர்

102. 60 அடி தபசு மரம் காட்சிப் பொருளாக வைத்து காணப்படும் கூத்து

அர்ச்சுனன் தபசு

**103. கம்பம் ஊன்றுதல் நிகழ்வு எந்தக் கூத்தில் இடம்பெறுகிறது?**

காமன்கூத்து

**104. வீரபத்திரர் ஆட்டம் பிரதானமாக ஆடப்படும் பிரதேசம்**

தென்மராட்சிப் பிரதேசம்

**105. காமன் கூத்தின் பிரதான இசைக்கருவி**

தப்பு

**106. தட்டான் என்ற முரண்பாட்டுப் பாத்திரத்தைக் கொண்ட ஈழத்துக் கூத்து**

கோவலன் கூத்து

**107. மண்டோதரி புலம்பல் எக்கூத்தில் இடம்பெறும்?**

இராவணேசன்

**108. கூத்து எனும் சொல் எதிலிருந்து தோற்றம் பெற்றது?**

குதி

**109. வட்டக்களரியில் சபையோர் எங்கு இருப்பர்?**

அரங்கின் நடுவில்

**110. சிந்துநடை ஆட்டங்களை உள்வாங்கி பொன். கணேசமூர்த்தியால் ஆக்கப்பட்ட ஆற்றுகை**

சகுனிகள் மூவர்

**111. தென்மோடி ஆடல் மெட்டுக்களை உள்வாங்கி காரை செ. சுந்தரம்பிள்ளையால் உருவாக்கப்பட்ட ஆற்றுகை**

பாஞ்சாலி சபதம்

**112. தமிழர்களின் மரபுவழி நாடகங்கள் எவ்வாறழைக்கப்படும்?**

கூத்து

**113. கூத்தின் நடிப்பு எப்பண்புடன் காணப்படும்?**

படர்க்கைப் பண்பு, எடுத்துரைக்கும் பண்பு

**114. கூத்துக்கள் முதலில் மேடையேற்றுவது எவ்வாறு அழைக்கப்படும்?**

களரி ஏற்றம்

**115. கூத்துக்களில் அனைத்து ஆடை அணிகலங்களும் அணிந்து ஒத்திகை பார்த்தல்**

அடுக்குப் பார்த்தல்

**116. சிந்து நடைக் கூத்தினை வேறு எவ்வாறு அழைப்பர்?**

துள்ளல் கூத்து

**117. ''வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள்'' என்ற நூலின் ஆசிரியர்**

திரு. அருணா செல்லத்துரை

**118. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆடப்படும் வடமோடிக் கூத்து கள்**

தரும புத்திரன், பப்பிரவாகம், சடாசுரன்

**119. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வடமோடிக் கூத்து ஆடப்படும் பிரதேசங்கள்**

வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம்

**120. கூத்துக்கள் கருப்பொருளின் அடிப்படையில் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?**

சைவக் கூத்துக்கள், கத்தோலிக்க கூத்துக்கள்

**121. வடமராட்சியில் பெரிதும் பிரபல்யம் பெற்ற நாட்டை வடிவ கூத்து?**

செட்டி வர்த்தகன்

**122. மன்னார் பிரதேசத்தில் ஒத்திகை பார்த்தலை எவ்வாறு அழைப்பார்?**

ஏசார்

**123. *மட்டக்களப்பில் கூத்துகளுக்கு பிரதி வழங்குதலை எவ்வாறு அழைப்பர்?***

*சட்டம் கொடுத்தல்*

**124. *அர்ச்சுனன் தபசில் பெருங்காட்சிப் பண்பாக அமைவது?***

*தபசு மரம்*

**125. *பொன்னர்சங்கர்எத்தெய்வவழிபாட்டுடன்தொடர்புடையது?***

*அண்ணமார் வழிபாடு*

# இசை நாடகம்

1. ***பார்ஷி அரங்கு எனப்படுவது யாது?***

   *பார்ஷி இன மக்களால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட அரங்கு. தெலுங்கு வழியாகத் தமிழுக்கு வந்தது.*

2. ***பார்ஷி நாடகம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?***

   *அண்ணாவி மரபு நாடகம், கொட்டகைக் கூத்து, ஸ்பெசல் நாடகம், இசை நாடகம்*

3. ***இசை நாடகம் இலங்கையில் வளர்ந்த முறையினை மூன்று கட்டங்களாக வகுத்தவர்***

   *செ. சுந்தரம்பிள்ளை*

4. ***இசை நாடகத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள்***

   *நாட்டுக்கோட்டை செட்டியார்கள்*

5. ***ஈழத்தில் இசை நாடகம் வளர்ச்சிபெற்ற மூன்று காலகட்டங்கள்***

   *1. கி.பி. 1919க்கு முற்பட்ட காலம்*

   *2. கி.பி. 1919 - 1939க்கு இடைப்பட்ட காலம்*

   *3. 1939க்கு பிற்பட்டகாலம்*

6. ***இசை நாடகத்தின் பிரதான இயல்பு***

   *பாடலும் நடிப்பும்*

7. ***இசை நாடகங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்***

   *ஹார்மோனியம், மிருதங்கம்*

8. ***இசை நாடகத்தில் பிரதானப்பட்டு நிற்கும் சித்திரிப்புகள்***

   *குரல் சித்திரிப்பு, உணர்ச்சிவழிச் சித்திரிப்பு*

**9. இசை நாடகத்தின் தந்தை**

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

**10. ஸ்பெசல் நாடக மரபில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் இசை**

கர்நாடக இசை

**11. கொட்டகை கூத்து அரங்குகள்**

புத்துவாட்டி மடுவம், கொட்டடிக் கறுத்தார் மடுவம், கொண்டலடி மடுவம், அந்தியடி மடுவம்

**12. பணம் கொடுத்து நாடகம் பார்க்கும் முறையினை அறிமுகப்படுத்திய நாடகமரபு**

பார்ஷி நாடக மரபு

**13. இசை நாடகத்தில் கதைப்பொருளாக அமைந்தவை**

புராண இதிகாசக் கதைகள், வரலாற்றுக் கதைகள், நாட்டார் கதைகள்

**14. இசை நாடக ஆற்றுகைகள்**

சம்பூர்ண அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, பக்த நந்தனார், பூதத்தம்பி, கோவலன் கண்ணகி, ஞான சௌந்தரி

**15. ஈழத்தில் எப்போது இசை நாடகம் அறிமுகப்படுத்தப்பட்டது?**

18ஆம் நூற்றாண்டு

**16. ஈழத்தில் இந்தியக் கலைஞர்களால் மட்டுமே இசை நாடகங்கள் மேடையேற்றப்பட்ட காலம்**

1919க்கு முற்பட்டகாலம்

**17. 1939க்கு பிற்பட்ட காலத்தில் இசை நாடகத்தின் போக்கு எவ்வாறிருந்தது?**

இலங்கைக் கலைஞர்களால் மாத்திரம் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டது.

18. **தமிழ் நாட்டில் இசை நாடகங்கள் மூலம் புகழ் பெற்ற கலைஞர்கள்**

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், வேலு நாயக்கர், எஸ்.ஜி. கிட்டப்பா, செந்திவேல் தேசிகர், கே.பி. சுந்தராம்பாள், எம்.ஆர். கோவிந்தசாமி

19. **மிருதங்கம் வாசித்து புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள்**

கோடை இடி இரத்தினம், அருளம், முருகையா, சிவபாதம்

20. **தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்களின் எண்ணிக்கை**

40

21. **காதர் பாச்சா, பிலிப், ஜோன்கபாஸ், இணுவில் சரவணமுத்து ஆகியோர் வாசித்து புகழ்பெற்ற இசைக்கருவி**

ஹார்மோனியம்

22. **தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய வரலாற்று நாடகங்கள்**

சதி அனுஷியா, பவளக்கொடி, பிரகலாதன், அல்லி சரித்திரம், லவகுசா, அபிமன்யு

23. **தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய சமஸ்கிருத நாடகங்கள்**

பிரபுவின் லீலை, சுந்தரி

24. **இசை நாடகத்துறையில் எல்லா வகையிலான பாத்திரங்களையும் மேற்கொண்டு சிறப்பித்தவர்கள்**

வி.வி. வைரமுத்து, ம. தைரியநாதன்

25. **தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் தோற்றுவித்த நாடகசபை**

ஒறிஜினல் போய்ஸ் கம்பனி

26. **சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய சேக்ஸ்பியரின் நாடகங்கள்**

றோமியோ யூலியட், சிம்பலைன்

27. **1960, 1970, 1980 களில் ஈழத்து இசை நாடகத்துறையில் மாபெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்**

*வி.வி. வைரமுத்து*

28. **வி.வி. வைரமுத்துவால் அமைக்கப்பட்ட சபா**

*வசந்தகான நாடகசபா*

29. **வி.வி. வைரமுத்து சிறப்பாக நடித்துப் புகழ்பெற்ற பாத்திரங்கள்**

*அரிச்சந்திரன், நந்தனார், அந்திராசி, சத்தியவான், சந்திரமதி*

30. **பொன்னாலைக் கிருஷ்ணனின் நடிப்பு முறையில் காணப்பட்ட சிறப்பம்சம்**

*''பபூன்'' பாத்திரந்தாங்கி, சமகால விடயப் பொருள்களை நகைச்சுவையாக உடன் பாடலாக இயற்றிப் பாடுதல்*

31. **நடிகமணி வி.வி. வைரமுத்துவின் சீடர்கள்**

*இரத்தினம், செல்வம், தைரியநாதன், சரவணமுத்து*

32. **ஈழத்து இசை நாடகங்களில் பெண் பாத்திரச் சித்திரிப்பில் புகழ் பெற்றவர்கள்**

*செல்வரத்தினம், எம்.வி. கிருஷ்ணாழ்வார்*

33. **செல்வரத்தினம் மேற்கொண்ட பாத்திரங்கள்**

*சந்திரமதி, நல்லதங்காள், சாவித்திரி, அல்லி, ஞானசௌந்தரி*

34. **ஆழ்வார்ப்பிள்ளை எனும் இயற்பெயரினைக் கொண்டவர்**

*எம்.வி. கிருஷ்ணாழ்வார்*

35. **எம்.வி. கிருஷ்ணாழ்வார் நாடகங்களை நடித்த வேறு நாடுகள்**

*இந்தியா, மலேசியா*

36. **''ஈழத்துச் சங்கரதாஸ்'' என அழைக்கப்பட்டவர்**

*எம்.வி. கிருஷ்ணாழ்வார்*

37. **கிருஷ்ணாழ்வார் நடித்துப் புகழ்பெற்ற பாத்திரங்கள்**

சுபத்திரை, கிருஷ்ணன், பவளக்கொடி, நல்லதங்காள்

38. **இயமன் பாத்திரத்தை மேற்கொண்டு புகழ்பெற்ற ஈழத்துக் கலைஞர்கள்**

மார்க்கண்டு, சின்னமணி

39. **சரவணமுத்து மேற்கொண்டு புகழ்பெற்ற பாத்திரங்கள்**

நகைச்சுவை, துணைப்பாத்திரங்கள்

40. **இசை நாடகத்தில் ஆண்கள் பெண் பாத்திரம் ஏற்று நடிப்பதினை எப்பெயரால் அழைப்பது?**

ஸ்திரிபாட்

41. **இசை நாடகங்களில் ஆண்கள் ஆண் பாத்திரம் ஏற்று நடிப்பதினை எப்பெயரால் அழைப்பர்?**

ராஜபாட்

42. **ஈழத்து இசை நாடகத்தில் முதல் பெண் நடிகை**

கன்னிகா பரமேஸ்வரி

43. **இசை நாடகங்கள் அதிகம் எழுதிய இந்திய நாடக கலைஞர்**

சங்கரதாஸ் சுவாமிகள்

44. **பார்ஷி நாடகத்துடன் இலங்கையில் அறிமுகமான வாத்தியக் கருவி**

ஹார்மோனியம்

45. **கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணரால் நாடக உலகின் இமயம் என அழைக்கப்பட்டவர்**

சங்கரதாஸ் சுவாமிகள்

46. **ஈழத்து இசை நாடக மரபில் குறிப்பிடத்தக்க பெண்பாகமாடி**

செல்வரத்தினம்

47. **''ஈழத்து இசை நாடக வரலாறு'' எனும் நூலை எழுதியவர்**

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

48. **''வைமுத்து வாழ்வும் அரங்கும்'' எனும் நூலின் ஆசிரியர்**

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

49. **வில்லிசைக் கலைஞராக சிறந்து இசை நாடகத்தில் சிறப்பாக நடித்த கலைஞர்**

(சின்னமணி) கணபதிப்பிள்ளை

50. **நடிகமணி வி.வி. வைரமுத்துவுடன் இணைந்து அரிச்சந்திரன் நாடகத்தில் சந்திரமதி வேடமேற்ற கலைஞர்**

செல்வரத்தினம்

51. **இசை நாடகங்களில் வேட உடைகள் எவ்வாறு காணப்படும்?**

பகட்டான மினுமினுப்பான பட்டாடைகள்

52. **வி.வி. வைரமுத்துவிற்கு புகழீட்டிக் கொடுத்த பாத்திரம்**

புலையன்

53. **இசை நாடக மரபின் மூலம் ஈழத்து அரங்கில் ஏற்பட்ட மாற்றம்?**

படச்சட்ட அரங்கு அறிமுகம்

தொழில்துறை நடிப்புக் குழு அறிமுகம்

54. **''சிட்டுப் பயல்களே சிட்டுப் பயல்களே....'' எந்நாடகப் பாடல்?**

அரிசந்திர மயான காண்டம்

55. **''தொன்று திகழ்ந்திரு இன்று இலங்கிடு'' என்ற பாடல் எந்நாடகத்திற்குரியது?**

பூதத்தம்பி எனும் இசைநாடகம்

# சிங்கள நாடக அரங்கு

1. **சிங்கள நாடகங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

   1. பாரம்பரிய அரங்கு 2. நவீன அரங்கு

2. **பாரம்பரிய அரங்கினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

   1. கரணம் சார் நாடகம் 2. நாடகம் சார் கரணம்

   3. சமயம் சாராத நாடகம்

3. **கரணம் சார் நாடக வகைகள்**

   சன்னியக்கும, கொஹம்பங்கரிய, கம்மடுவ, ரட்டயக்கும

4. **தொவில், மகாபிரித் ஆகியவை எந்த நாடக வகைக்குள் அடங்கும்?**

   நாடகம் சார் கரணம்

5. **சமயம் சாராத நாடகங்கள்**

   கோலம, சொக்கறி, நூர்த்தி, நாடகம

6. **நவீன நாடகம் என்பது**

   19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வருகையின் பின் தோன்றிய நாடகங்கள்

7. **கரணம் என்றால் என்ன?**

   சடங்கு

8. **சிங்கள மக்கள் சடங்கினை செய்வதற்கான நோக்கங்கள்**

   உடல் வளம், பயிர்வளம், பேயோட்டுதல், தொற்றுநோயில் இருந்து விடுபடல், இயற்கைச் சக்திகளை மகிழ்வித்தல்

9. **''காரிய கரவன ராள'' எனப்படும் எடுத்துரைஞர் இடம்பெறும் சடங்கு மரபு**

   கோலம

10. ***''தக அட்ட சன்னிய'' நிகழ்த்தப்படுவதன் பிரதான நோக்கம்***
நோய் தீத்தல்

11. ***சொக்கறி நாட்டார் நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள்***
சொக்கறி, பரிகாரி (வைத்தியர்), மந்திரவாதி (ஆண்டிகுரு), பறையா

12. ***''கோலம்'' நிகழ்த்தப்படுவதற்கு முன்னர் நிகழ்த்தப்படும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற கோலம்***
பணிவுட கோலம்

13. ***இலங்கை தமிழ் மக்களிடையே காணப்படும் கூத்து போன்று சிங்கள மக்களிடையே காணப்படுவது***
நாடகம

14. ***''சொக்கறி'' நாடகத்தில் பாவிக்கப்படும் வேட முகங்கள் எவற்றால் செய்யப்பட்டவை?***
மரத்தாற் செய்யப்பட்டவை

15. ***நூர்த்தி என்பது***
சிங்கள மக்களிடையே காணப்படும் இசை நாடகம்

16. ***நாடகமவில் வரும் கோமாளிப் பாத்திரம் போன்று நூர்த்தியில்***
பபூன் / விகடகவி

17. ***சொக்கறி ஆற்றுகை என்பது ஒரு***
வேண்டுதல் சடங்கு

18. ***சிங்களத்தில் நாடகத்தை குறிப்பதற்கான சொல்***
நாட்டிய

19. ***'கோலம' எனும் சிங்கள மரபுவழி நாடகத்தின் பிரதான அம்சம்***
வேடமுகம்

20. **பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடைய சிங்கள சடங்கு**
சொக்கறி

21. **சிங்களப் பாரம்பரிய அரங்கில் பேயோட்டும் சடங்குடன் தொடர்புடைய அளிக்கை வடிவம்**
சன்னியக்கும

22. **சன்னியக்குமவில் இடம்பெறும் பேய்களின் எண்ணிக்கை**
18

23. **சப்பிரகமுவ மற்றும் கரையோரப் பிரதேசங்களில் அதிகமாக ஆற்றுகை செய்யப்படுவது**
சன்னியக்கும

24. **சன்னியக்கும நிகழ்த்தப்படும் அரங்கவெளி**
சன்னியக்கும வீதிய

25. **7 அன்றேல் 18 பந்தல்கள் அமைத்து நிகழ்த்தப்படும் சடங்கு**
சன்னியக்கும

26. **சன்னயக்கும ஆற்றப்படும் வேளைகள்**
மதியம், மாலை, சாமம்

27. **''கோலம'' என்பதன் பொருள்**
நடிகன் ஒருவன் தரிக்கும் வேடம்

28. **கோலம நாடகத்திற்கு செய்யப்படும் வேடமுகங்களின் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் மரம்**
கதுறு

29. **''கோலம'' எனும் சடங்கு நிகழ்த்தப்படும் பிரதேசங்கள்**
தாழ் நாட்டுப் பிரதேசங்கள்

30. **கோலம நாடக ஆற்றுகையின் சிறப்பியல்பு**
சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை எள்ளி நகையாடுதல்

31. **கோலம சடங்கில் இடம்பெறும் பிரதான கதைகள்**

மனமே கதாவ, கொண்கொட்டி கதாவ, சந்தகிந்துரு கதாவ, கோடயம்புற கதாவ

32. **கோலமவில் இடம்பெறும் பாத்திரங்கள்**

பொலிஸ், வீரன், அரசன், குடிபோதைக்காரன், விதானை, கிளாக், முதலாளி, பிராணிகள், மனிதரல்லாத பாத்திரங்கள்

33. **கோலம நாடகத்தையொத்த தமிழ் பாரம்பரிய ஆற்றுகை**

வசந்தன் கூத்து

34. **சொக்கறி நிகழ்த்தப்படுவதற்கான நோக்கங்கள்**

பயிர் விளைச்சல், வளங்களின் செழிப்பு, சௌபாக்கியம்

35. **சொக்கறி நிகழ்த்தப்படும் பிரதேசம்**

மத்திய மலைநாடு

36. **சொக்கறி நாடகத்தில் அனைத்து பாத்திரங்களும் யாரால் மேற்கொள்ளப்படும்?**

ஆண்களால்

37. **சொக்கறி நாடகத்தில் மேலோங்கி நிற்கும் உணர்வு**

அங்கதச் சுவை

38. **சொக்கறியில் பாத்திரங்களை அறிமுகம் செய்பவர்**

பொத்தே குரு

39. **பிலிப்பு சிஞ்ஞோவின் சிங்கள நாடகம்**

அகலேப்பொல

40. **முதலாவது சிங்கள நாடகம்**

அகலேப்பொல

41. **நாடகம எப்பிரதேசங்களில் ஆடப்படும்**

தென்கரையோரப் பிரதேசங்களில்

42. **சிங்கள மொழியுடன் தமிழ் மொழியும் கலந்து ஆற்றுகை செய்யப்படும் கலைவடிவம்**

நாடகம

43. **சொக்கறி நிகழ்த்துகையுடன் தொடர்புடைய பண்டிகை**

சிங்கள வருடப்பிறப்பு

44. **பராக்கிரம நிரியல்லவின் நாடகங்கள்**

சரண்தாஸ், மிருட்ச கடிகம், மாயப்பட்டாடை, செக்கு, பயணம்

45. **சொக்கறி நாடகத்தில் பயன்படுத்தப்படும் பிரதான இசைக் கருவிகள்**

கடபேரி எனப்படும் மத்தளம், தாளம், உடுக்கு (சில சந்தர்ப்பங்களில்)

46. **நாடகமவில் மேடையில் கொண்டுவராத பாத்திரங்களை எடுத்துரைப்பவர்**

பெத்தேகுரு

47. **நாடகமவில் பயன்படுத்தப்படும் புராதன வாத்தியங்கள்**

எக்காளம், மத்தளம் (பெர), கைத்தாளம், கொகண எனும் குழல்

48. **சிங்கள கிறிஸ்தவ நாடகமாகக் கருதப்படுவது**

நாடகம

49. **தொவில் சடங்கில் இடம்பெறும் பாத்திரங்கள்**

பிசாசு, நோயாளி, பிசாசு ஓட்டுபவர்

50. **விஜயனுடன் தொடர்புடைய கதையம்சம் நிகழ்த்தப்படும் சடங்கு**

கொஹம்பங்கரிய

51. **கொஹம்பங்கரியவில் செய்யப்படும் சடங்குகள்**

நாயக்கம, உறுயக்கம

52. ''வாதுலபாகே'' எனப்படும் ஆடல் இடம்பெறும் சடங்கு

கம்மடுவ

53. சூனியம், செய்வினை, கண்ணூறு, நாவூறு என்பவற்றைப் போக்கும் கரணங்களில் நிகழ்த்தப்படும் இடைநிகழ்வு

வடிகப்பட்டின

54. களுமல் எனும் பிசாசு உருவத்தை செய்து படையல் வடைத்து வழிபடும் கரணம்

றட்டயக்கும

55. ''கரா' எனும் பிசாசை ஓட்டும் சடங்கு

கராயக்கும

56. சிங்கள மரபில் உருவான முதலாவது நூர்த்தி

ரொலினா

57. நூர்த்தி நாடகங்களில் புகழ்பெற்ற நாடகாசிரியர்கள்

ஜோன் டி சில்வா, தொன் பஸ்திரியன், பீற்ற சில்வா

58. 1956 சிங்கள நவீன நாடகங்களில் பிரதானமாகத் திகழ்பவர்

பேராசிரியர் எதிரி வீரசரச்சந்திரா

59. பல்கலைக்கழகத்தினூடாக நவீன நாடகப் பண்பு கொண்ட சிங்கள நாடகங்களை முன்னெடுத்தவர்

E.F. லூரடோ

60. E.F. லூரடோ 1943-1952 காலகட்டங்களில் மேடையேற்றிய நாடகங்களின் எண்ணிக்கை

9

61. 1933 - 1942 வரை E.F. லூரடோவால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

The Rival, Imaginery Invalid, Arms and the man

62. **ஸெரிடன் என்பவரால் எழுதப்பட்ட நாடகம்**

The Rival

63. Imaginery Invalid **என்ற நாடகத்தை எழுதியவர்**

மோலியர்

64. Arms and the man **என்ற நாடகத்தை எழுதியவர்**

பேனாட்ஷோ

65. ***தமிழர் மத்தியில் உள்ள கோயிற்சடங்கு போன்று சிங்களவர் மத்தியில்***

*மகாபிரித் ஓதுதல்*

66. ***சொக்கரியுடன் தொடர்புடைய தமிழர் கூத்து***

*மகிடிக்கூத்து*

67. ***சிங்கள மக்களின் தேசிய வடிவம்***

*கண்டிய நடனம்*

68. ***மனமே, சிங்கபாகு எனும் பிரபல சிங்கள நாடகங்களைத் தயாரித்தவர்?***

*பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திரா*

69. ***நூர்த்தி அரங்கிற்கான நாடகங்களினை எழுதி புகழ்பெற்றவர்***

*ஜோன்.டீ. சில்வா*

70. ***நூர்த்தி நாடகத்தில் பயன்படுத்தப்படும் இசை***

*இந்துஸ்தானி*

71. ***அங்கத சுவையுடைய சிங்கள நாட்டார் அரங்கு***

*சொக்கரி*

72. ***சிங்கள நவீன நாடகத்தின் முன்னோடி***

*எதிர்வீர சரத்சந்திரா*

73. **சிங்கள நாடக அறிஞர் பராக்கிரம நிரியெல்லவின் நாடக நிறுவனம்**

*ஜனகரலிய (மக்கள் களரி)*

74. **ஜனகரலிய நிறுவப்பட்ட ஆண்டு**

*2003*

75. **பேராசிரியர் சரத்சந்திராவின் முதலாவது தழுவல் நாடகம்**

*முதலாளிகே பெறலிய (முதலாளியின் மாற்றம்)*

76. **'பபாவதி' என்ற நாடகத்தைத் தயாரித்தவர்**

*பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திரா*

77. **1880ஆம் ஆண்டளவில் 'பார்சி' மரபு நாடகங்களை மேடையேற்றிய நாடகக் கம்பனியின் உரிமையாளர்**

*பாலிவாலா*

78. **நாடகம் கதைகளை நூர்த்தி நாடகங்களாக ஆரம்பகாலங்களில் மாற்றியமைத்தவர்**

*டொன். பஸ்ரியன்*

79. **'நாடகம'வில் தோன்றும் பகுபூதையா அல்லது கோணங்கி எனும் பாத்திரத்தை நீக்கி அரங்கிலே அறிமுகம் செய்யப்பட்ட பாத்திரம்**

*பபூன்*

80. **ஜோன்.டீ.சில்வா சமஸ்கிருத நாடக மரபைப் பின்பற்றி அறிமுகம் செய்த பாத்திரம்**

*சூத்திரதாரி*

81. **'நாடகம'வை இசைநாடகம் என்றும் அழைக்கலாம் என்று கூறியவர்**

*ஈ.ஆர், சரச்சந்திரா*

**82.** ***'நாடகம' எனும் கூத்து வடிவத்தின் தந்தையாகக் கருதப்படுபவர்***

பிலிப்பு சிஞ்ஞோ

**83.** ***ஜோன் டீ சில்வா சிங்கள நாடக வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவினார்?***

ஆங்கில வடமொழி மரபினடியாக ஒரு புது நாடக மரபை ஏற்படுத்தி சிங்கள நாடக வளர்ச்சிக்கு உதவினார்.

**84.** ***தயானந்த குணவர்த்தனவின் நாடகங்கள்***

நரி பேனா, பராஸ்ஸயா, சுவர்ணதிலகா

**85.** ***ஹென்றி ஜெயசேனவின் நாடகங்கள்***

வெண்கட்டி வட்டம், குவேனி, ஜனேலய

**86.** ***தம்மயகொடவின் நாடகங்கள்***

சம்மந்தம், ஒவ்வொரு மனிதன்

**87.** ***12 வகையான கரணங்கள் உள்ள சடங்கு***

கறாயகும

**88.** ***கறாயகமவில் கரணங்களை நடத்துபவன்***

கொட்டேறுவா

**89.** ***களுயகா, ஹீனியம் யகா, றீறியகா ஆகிய பிசாசுகள் இடம்பெறும் சடங்கு***

றட்டயகும

**90.** ***'வருசன்னிய' எனப்படும் மிகவும் கொடூரமான பிசாசு இடம்பெறும் சடங்கு***

சன்னியகும

# ஆரொடு நோகேன்

1. ***ஆரொடு நோகேன் நாடகம் 1993ஆம்ஆண்டு யாரால் எழுதப்பட்டது?***

   *குழந்தை ம. சண்முகலிங்கம்*

2. ***எந்த பாடசாலையின் தமிழ்தின விழாவிற்காக ஆரொடு நோகேன் நாடகம் எழுதப்பட்டது?***

   *சுண்டிக்குழி மகளிர் கல்லூரி*

3. ***ஆரொடு நோகேன் பாடசாலை நாடகம் எனக் கருதப்படுவதற்கான காரணம்***

   *பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளை அவர்களையே மையமாகக் கொண்டு கலந்துரையாடிப் படைக்கப்பட்டமை.*

4. ***ஆரொடு நோகேன் முதன் முதலில் எப்போது மேடையேற்றப்பட்டது?***

   *17.06.1993*

5. ***ஆரொடு நோகேன் நாடகத்தை முதன்முதலில் நெறியாள்கை செய்தவர்***

   *குழந்தை ம. சண்முகலிங்கம்*

6. ***நாடகஅரங்க கல்லூரிக்காக ஆரொடுநோகேன் நாடகம் யாரால் நெறியாள்கை செய்யப்பட்டது?***

   *க. சிதம்பரநாதன்*

7. ***ஆரொடு நோகேன் நாடகம் அடங்கும் நாடகப்பாணி***

   *யதார்த்த பாணி*

8. ***ஆரொடு நோகேன் நாடகத்தில் காட்சிப்படுத்தப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை***

   *3*

9. **ஆறொடு நோகேன் நாடகத்தில் வரும் முதல் குடும்பத்தின் பாத்திரங்கள்**

ரஞ்சித்குமார் (தந்தை), சுபத்திரா (தாய்), சங்கரி (மகள்)

10. **ஆறொடு நோகேன் நாடகத்தின் கருப்பொருள்**

பெற்றோர் தம் பிள்ளைகளின் மீது கொண்ட அதீத அன்பின் காரணமாக அவர்களின் கல்விக்காக தம்மையறியாது தாமும் வருந்தி பிள்ளைகளையும் வருத்தும் நிலை

11. **இரண்டாவது குடும்பத்தில் வரும் பாத்திரங்கள்**

ராஜ்குமார் (தகப்பன்), செல்வராணி (தாய்), ரஜீவ் (மகன்), ஷீலா (மகள்)

12. **மத்தியதர சாதாரண வர்க்கமாகக் கருதப்படும் மூன்றாவது குடும்பத்தின் பாத்திரங்கள்**

இராஜதுரை (தந்தை), சறோஜினி (தாய்), ஆரணி (மூத்தமகள்), அம்பிகை (இளைய மகள்)

13. **சங்கரி மற்றும் அம்பிகையின் வயது**

15

14. **ராஜ்குமார், இராஜதுரையின் வயது**

60

15. **கதையில் முதலாவது குடும்பத்தின் கருப்பொருள்**

அதீத அன்பின் துயர்

16. **ஆறொடு நோகேன் நாடக ஆரம்பத்தில் இசைக்கப்படும் பாடல்**

அம்புலிமாமா பாடல்

17. **ஆறொடு நோகேன் நாடகக் கதையில் திருமண நினைவுநாள் விழாவில் நடிக்கப்படும் நாடகம்**

கனவு

18. ***இரண்டாவது குடும்பத்தின் கதையாகக் கருதப்படுவது?***

கண்டிப்பும் அதிகாரத்தன்மை மிக்க தந்தைக்கும் அன்பு காட்டும் தாயிற்கும் இடையேயுள்ள பிள்ளைகள்

19. ***ஆறொடு நோகேன் நாடகம் எப்பருவத்தினரின் பிரச்சினையை முன்வைக்கின்றது?***

கட்டிளமைப் பருவத்தினரின்

20. ***ஆறொடுநோகேன் நாடகத்தில் பாடப்படுத்துகின்ற "அட வீட்டுக்கு வீடு...." என்ற திரைப்படப் பாடலை இயற்றியவர்***

கவிஞர் வாலி

# நெறியாள்கை

1. **நாடக எழுத்துருவை நாடக ஆற்றுகையாகப் படைப்பாக்கம் செய்பவர்**

   *நெறியாளர்*

2. **கூத்தினை நெறிப்படுத்துபவர்**

   *அண்ணாவியார்*

3. **நெறியாள்கை என்பது**

   *நாடக எழுத்துருவை நடிகன் என்ற சாதனத்ினூடாக பல்வேறு கலைத்துறை வல்லுனர்களுடன் உயிர்பெறச் செய்யும் செயற்பாடு*

4. **நெறியாளரது பிரதான பணிகள்**

   - *எழுத்துருப் பகுப்பாய்வும் திட்டமிடலும்*
   - *நடிகர் தெரிவும், நடிபாகமளித்தலும்*
   - *ஏனைய அரங்க மூலகங்களை இணைப்பாக்கம் செய்தல்*

5. **நாடகத்தினை பழக்குபவர்**

   *நெறியாளர்*

6. **நெறியாளரது தகைமைகள்**

   *விமர்சன நோக்கு, அழகியலுணர்வு, தலைமைத்துவப் பண்பு, முகாமைத்துவ அறிவு, சமநிலை ஆளுமை, கூட்டாக இயங்கும் பண்பு, படைப்பாக்கச் சிந்தனை, இலக்கிய அறிவு, நெகிழ்ச்சித் தன்மை*

7. **எழுத்துருவொன்றிற்கு வியாக்கியானம் அளிப்பவர்**

   *நெறியாளர்*

8. **விலாசம், இசை நாடகம் போன்றவற்றில் நெறியாளரை எவ்வாறு அழைப்பர்?**

   *அண்ணாவியார், மாஸ்டர், வாத்தியார்*

**9. நெறியாளரை வேறு எவ்வாறு அழைப்பர்?**

இயக்குனர்

**10. மேடையில் சர்வாதிகாரி என அழைக்கப்படுபவர்**

நெறியாளர்

**11. கூத்தில் நெறியாள்கை**

ஆடலையும் பாடலையும் பயிற்றுவிப்பதாக அமையும்.

**12. எக்கூத்துப் பாரம்பரியத்தில் சில பெண் நெறியாளர்களும் காணப்பட்டனர்?**

கத்தோலிக்க கூத்துப் பாரம்பரியத்தில்

**13. ஒத்திகையின் வகைகள்**

வாசிப்பு ஒத்திகை, செயல் ஒத்திகை, மனன ஒத்திகை, பாத்திரப்படைப்பு ஒத்திகை, வாக்கிய விதானிப்பு ஒத்திகை, பூரணப்படுத்தும் ஒத்திகை, தொழிநுட்ப ஒத்திகை, ஆற்றுகை, மதிப்பீடு

**14. வெள்ளுடுப்பு ஒத்திகை என்பது**

ஒரு நாடகத்தில் இடம்பெறும் இறுதி ஒத்திகை

**15. ஒத்திகை என்றால் என்ன?**

எழுத்துருவொன்றை அதன் ஆற்றுகை சார்ந்த முழுமை நிலைக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுப் படிமுறைகள் 'ஒத்திகை' எனப்படும்.

**16. நெறியாளர் அரங்கிலே நடிகனைத் தெரிவு செய்யப் பயன்படுத்தும் பிரதான முறைகள்**

திறந்த தெரிவு, மூடிய தெரிவு, சல்லடைத் தெரிவு, இறுதித் தெரிவு

**17. திறந்த தெரிவு என்றால் என்ன?**

அனைத்து நடிகர் முன்னிலையிலும் மேற்கொள்ளப்படும் பாத்திரத் தெரிவு

18. ***மூடிய தெரிவு என்பது***

*நெறியாளர், தயாரிப்பாளர் முன்னிலையில் நடிகர்களைத் தனித்தனியாக அழைத்து மேற்கொள்ளப்படும் பாத்திரத் தெரிவு*

19. ***ஒரு பாத்திரத்தினூடாக இன்னொரு பாத்திரத்தை தெரிவுசெய்யும் முறை***

*சல்லடைத் தெரிவு*

20. ***நாடகமொன்றில் இறுதியாக மேற்கொள்ளப்படும் தெரிவு***

*இறுதித் தெரிவு*

# நாடகத் தயாரிப்பு

1. ***நாடகத் தயாரிப்பு என்றால் என்ன?***

   *நாடகக் கலைப்படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைகளைத்தோற்றுவிப்பதுடன்கலைப்பெறுமானங் களுக்கான சூழல்களைத் திட்டமிடுவதுடன் கூடிய முகாமைத்துவச் செயற்பாடு*

2. ***தயாரிப்பாளரின் பிரதான பணி***

   *நாடகத்திற்கு தேவையான நிதிச்செலவினைப் பொறுப்பேற்றல்*

3. ***தயாரிப்பாளரின் தகைமைகள்***

   *தலைமைத்துவம், ஆலோசனைகூறும் திறன், வழிப்படுத்தும் ஆற்றல், நாடகம் பற்றிய அறிவு, நிதி நிர்வாகத்திறன், தொடர்பாடற் திறன்*

4. ***தயாரிப்பாளர் என்பவர்***

   *ஒரு நாடகத்தை நெறியாளர் மேடையேற்றுவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்பவர்*

5. ***அரங்கத் தயாரிப்பு எனும் நூலின் ஆசிரியர்***

   *திரு.இ. குணசீலன்*

6. ***நாடகத் தயாரிப்பின்போது விளம்பரம் செய்தல், விற்பனைச் சீட்டுக்களை விநியோகம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்***

   *தயாரிப்பாளர்*

7. ***நாடகமொன்று அரங்கேற்றப்படுவதற்கு வேண்டிய சகல விடயங்களையும் செய்பவர்***

   *தயாரிப்பாளர்*

# அரங்க காட்சி விதானிப்பு

1. ***காட்சியமைப்பு என்பது***

   *எழுத்துருவில் அமைந்துள்ள விடயத்தை அரங்க நிலைக்குக் கொண்டுவரும்போது அதற்கான சூழலை உருவாக்குதல்.*

2. ***கூத்துக்களில் காட்சிகள் பார்வையாளருக்கு எவ்வாறு உணர்த்தப்பட்டன?***

   *வசனங்கள், பாட்டுக்கள் மூலம்*

3. ***தற்காலத்தில் காட்சி விதானிப்பிற்காகப் பயன்படுத்தப் படுபவை***

   *திரைகள், பக்கத்திரைகள், வான்திரைகள், கைப்பொருட்கள்*

4. ***காட்சி விதானிப்பின் வகைகளைத் தருக.***

   *1. யதார்த்த காட்சி விதானிப்பு*

   *2. யதார்த்த விரோத காட்சி விதானிப்பு*

5. ***யதார்த்த விரோத காட்சி விதானிப்பு என்பது***

   *அன்றாட வாழ்க்கைக்கு முரணாக அமையும் வகையில் காட்சிகளைக் காட்டுதல்*

6. ***யதார்த்தக் காட்சி விதானிப்பு என்பது***

   *வாழ்க்கையின் நடைமுறை விடயங்கள், உண்மை விடயங்களை இயற்கையாகக் காட்டுதல்*

7. ***காட்சி விதானிப்பின் கூறுகள்***

   *கோடு ரேகை, வடிவம், திணிவு, பெறுமதி, வர்ணம்*

8. ***மனோரதிய நாடகங்களில் காட்சி விதானிப்பு எவ்வாறு காணப்படும்?***

   *ஆடம்பரமான, அழகான சீனறிகள், சிம்மாசனங்கள், விரிப்புகள் போன்றவற்றால் காட்சிப்படுத்தப்படும்.*

9. **குறியீட்டப் பாணியிலான காட்சி விதானிப்புக்கள் எவ்வகை நாடகங்களில் இடம்பெறும்?**

*யதார்த்த விரோத நாடகங்கள்*

10. **நாடகத்திற்கான காட்சியின் வடிவமைப்பவர்**

*காட்சியமைப்பாளர்*

# அரங்க இசை விதானிப்பு

1. ***அரங்கில் செவிப்புல ரீதியான தாக்கத்தை பார்ப்போருக்கு ஏற்படுத்தும் துணைக்கலை***

*இசை விதானிப்பு*

2. ***இசை என்பது***

*ஒழுங்குபடுத்தப்பட்ட ஒலிகளின் கோலம்*

3. ***நாடகத்திலே இசை பயன்படும் தன்மையின் அடிப்படையில் இசையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?***

*1. நாடகச் செயலோடு இணைந்த இசை*

*2. நாடகப் பண்புடைய இசை*

4. ***நாடகச் செயலோடு இணைந்த இசை என்பது***

*நாடகச் செயலுக்கு உணர்வினைக் கொடுப்பதோடு சூழலையும் நிலைநிறுத்தி நிற்கும் இசை*

5. ***நாடகப் பண்புடைய இசை என்பது***

*குறித்த நாடகத்தின் மூலமாக நாடக கதையைக் கொண்டு செல்லப் பயன்பட்டு நிற்கும் இசை*

6. ***இசை பிறப்பிக்கப்படும் மூலகங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வகைப்படுத்தலாம்?***

*1. வாய்ப்பாட்டிசை (மிடற்றிசை)*

*2. கருவி இசை(வாத்திய இசை)*

7. ***கருவியால் வெளிப்படுத்தப்படும் இசையைக் கொண்டு இசைக்கருவிகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?***

*1. தோற்கருவி*    *2. துளைக்கருவி*

*3. நரம்புக்கருவி*    *4. கஞ்சற் கருவி*

*5. இலத்திரனியற் கருவி*

8. **தோற்கருவிகளுக்கு உதாரணம் தருக.**
மிருதங்கம், பறை, தபேலா, உடுக்கு, மத்தளம், தப்பு

9. **துளைக்கருவிகளைத் தருக.**
நாதஸ்வரம், புல்லாங்குழல், சுருதிப்பெட்டி, ஹார்மோனியம்

10. **வீணை, வயலின், தம்புரா போன்ற இசைக்கருவிகள் அடங்கும் வகை**
நரம்புக்கருவி

11. **கஞ்சற்கருவி வகைக்குள்ளே அடங்கும் இசைக்கருவிகள்**
சல்லரி, சலங்கை

12. **இலத்திரனியற் கருவிகளுக்கு உதாரணம் தருக.**
கீபோட், ஒக்ரபோட்

13. **நாடகத்தில் இசை பயன்படுத்தப்படும் தன்மைக்கு அமைய இசையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
கரு இசை, மனஉணர்வு இசை, பின்னோக்கு இசை, பின்னணி இசை

14. **நாடகம் நிகழ்த்தப் பெறும்போது அதற்கான இசையை வழங்கும் குழுவினர் மேடையில் எப்பக்கத்தில் இருக்க வேண்டும்?**
முன்பக்கத்தில்

15. **அரங்கில் இசை விதானிப்பை மேற்கொள்வதற்கான நோக்கங்களிலொன்று**
நாடக உணர்ச்சிக் கட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்து வதற்கு

16. **இசை விதானிப்பில் உருக்கமான சோகக் காட்சியொன்றைக் காட்டப் பயன்படும் வாத்தியம்**
வயலின்

17. ***ஒலி விளைவினை வகைப்படுத்துக.***

1. இயற்கையான ஒலிவிளைவு
2. செயற்கையான ஒலிவிளைவு

18. ***மையக்கருத்தை வெளிப்படுத்தும் இசை***

கரு இசை

19. ***இசை விதானிப்பை திட்டமிடும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள்***

- எழுதப்பட்ட நாடகத்திற்கான மோடி
- மையக்கரு
- கதைச்சூழல்
- அழுத்தம் கொடுக்க வேண்டிய இடங்கள்
- பாத்திரப்படைப்பு

20. ***அரங்கின் அரூப மூலகங்களில் ஒன்று***

இசை

21. ***நாடகத்திற்கான இசையினை வழங்குபவர்***

இசையமைப்பாளர்

